விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 22 செவ்வாய்க்கிழமை (05.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 137


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# மகிந்த – மைத்திரி நாளை சந்திப்பு!

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு!

(கொழும்பு)

நாளை புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடத்தப்பட உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களே இச்சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளனர். (24ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.பொது நூலகத்திற்கு அருகாமையில் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் தொடக்கம் அமைக்கப்பட்டுள்ள வெசாக் வலயத்தினை பார்வையிட அதிகளவான மக்கள் வருகை தருகின்றனர். வெசாக் கூடுகள் பல வர்ண மின்குமிழ்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டுள்ளது.

## மகிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தல் – பந்துல

(கொழும்பு)

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என முன்னாள் ஜனாதிபதியை மேற்கோள்காட்டி முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவித்துள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணை வலியுறுத்தல் வரவேற்கிறார் எரிக் சொல்ஹெய்ம்

(ஜெனிவா)

ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி வலியுறுத்தியமைக்கு இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைக்கு 24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கில் சிங்கள குடியேற்றங்களை புதிய அரசாங்கம் நிறுவ முயற்சி!

### அமைச்சர் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசாங்கம் அண்மையில் வடபகுதி தமிழர்களை முடக்கும் வகையில் இரு நீர்ப்பாசன திட்டங்களை முன்மொழிந்து, அதன் ஊடாக வடக்கில் சிங்கள குடியேற்றங்களை நிறுவ முயற்சிப்பதாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 27-ம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற வட மாகாணத்திற்கான நீர்ப்பாசனம் தொடர்பான கலந்துரையாடலில் மகாவலி கங்கையை வெலிஓயாவுக்கு திருப்புவது தொடர்பாகவும். மல்வத்து ஓயா நீரை மன் 24ஆம் பக்கம் பார்க்க....

### முந்திச் செல்ல முற்பட்ட வேளை

## அடுத்தடுத்து இரு விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் முற்செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதுண்டு காயமடைந்திருந்துள்ளார்.

அதேசமயம் அங்கு வந்த காரும் குடும்பஸ்தர் மீது ஏறி அவரது காலை முறித்துள்ளது. இதில் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார்.

முருகமூர்த்திவீதி வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தியாகராசா சசிகுமார் (வயது -39) என்ற குடும்பஸ்தரே சிகிச்சை பலனின்றி உயிரிழந் 24ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் முறைமை மாற்றம் இறுதி வரைபு 13-ம் திகதி

(கொழும்பு

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பிலான இறுதி சட்டவரைபு அங்கீகாரத்துக்காக எதிர்வரும் 13ஆம் திகதி இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


அத்துடன், புதிய தேர்தல் முறைமை நியூசிலாந்தின் தேர்தல் நடைமுறைகளில் காணப்படும் சாதகமான சில அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படும் எனவும் இத்தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கொழும்பில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தேர்தல் முறை மாதிரி ஒன்றை முன்வைத்திருந்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, இந்த யோசனைகள் தொடர்பில் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த புதிய தேர்தல் முறை 24ஆம் பக்கம் பார்க்க....

### கம்பி அறுந்து மின்சாரம் தாக்கியதில்

## தந்தையும் தனயனும் துடிதுடித்து மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்றையதினம் வீசிய கடும் காற்றினால் மின்சார கம்பி அறுந்து வீழ்ந்து மின்சாரம் தாக்கியதில் தந்தையும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் மல்லாகத்தில் இடம்பெற்றுள்ளது. தந்தையை மின்சாரத்தாக்குதலில் இருந்து காப்பாற்ற முற்பட்ட வேளையே ஒன்பது வயது மகனும் உயிரிழந்துள்ளான்.

இதில் மல்லாகம் கல்லாரையை சேர்ந்த பாலச்சந்திரன் ரஜீவன் (வயது-29) என்ற குடும்பஸ்தரும் அவரது மகனான மல்லாகம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுவரும் மாணவனுமான ரஜீவன் நிரூயன் (வயது 09) என்ற சிறுவனுமே உயிரிழந்துள்ளனர்.

மின்சாரம் தாக்கி தந்தையும் மகனும் உயிரிழந்த சம்பவத்தினால் நேற்றையதினம் மல்லாகம சோகத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

## வெலிக்கடை சிறைக் கைதிகள் கொலை விசாரணை கோரி ரணிலுக்கு மனு



(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறையில் கொல்லப்பட்ட 27 கைதிகளின் பெற்றோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தக்கவுள்ளனர்.

மே 15ஆம் திகதிக்கு பின்னர் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது. இதன்போது கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் நியாயம் பெற்றுத்தருமாறு பெற்றோர், உறவினர்கள் கோரிக்கை மனு ஒன்றை ரணிலிடம் கையளிக்கவுள்ளனர். ஏற்கெனவே இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்ட போதும்எவரும்கைதுசெய்யப்படவில்லை.

இந்தநிலையிலேயே கொல்லப்பட்ட சிறைக் கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் நீதி கேட்டு மனுவை கையளிக்கவுள்ளனர். அதேநேரம் பொரளையில் பேரணி ஒன்றையும் அவர்கள் நடத்த திட்டமிட்டுள்ளனர். (செ-11)

நடுவுநிலை தவறா நல்லவை சொல்லும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு உடைக்கப்பட்டு நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை சூரிய வத்தை பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று திங்கட்கிழமை காலை 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார் என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலுள்ளவர்கள் யாழ்.நகருக்குச் சென்றிருந்த நேரம் வீட்டுக்குள் நுழைந்து அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 2 பவுண் சங்கிலி, 2 பவுண் காப்பு, ¾ பவுண் மோதிரம் என்பன திருடப்பட்டுள்ளன.

மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (செ-11)

## ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட

# இலங்கை மத்திய வங்கித் தலைவர் மீண்டும் பணிக்கு திரும்பியமைக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில் விடுமுறையில் சென்றிருந்த இலங்கை மத்திய வங்கியின் தலைவர் அர்ஜுன் மகேந்திரன் மீண்டும் பணிக்கு திரும்பியிருப்பதை தேசிய சுதந்திர முன்னணி கண்டித்துள்ளது.

அரஜுன் மகேந்திரன் மீது ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்திய தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க இதனை தெரிவித்திருக்கிறார்.

மத்திய வங்கியின் தலைவர் ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறிய பியசிறி விஜேநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் வழக்கறிஞர்கள் அடங்கிய குழுவொன்றினால் வழங்கப்பட்ட இந்த தீர்ப்பை தம்மால் ஏற்க முடியாதென்று தெரிவித்தார்.

இந்த ஊழல் புகார்களை பொலிஸாரின் குற்றப் புலனாய்வு பிரிவிடமோ அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடமோ ஒப்படைத்து விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் தவறியுள்ளதாகவும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திடமிருந்து நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் விமர்சித்திருக்கிறார்.

விரைவில் நடைபெறவுள்ள இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று தாம் அமைக்கவுள்ள அரசாங்கத்தின் மூலம் இந்த ஊழல் குற்றச்சாட்டுக்களை விரிவாக விசாரிக்க தீர்மானித்துள்ளதாகவும் பியசிறி விஜேநாயக்க கூறினார்.

இதேவேளை இவரது இந்த குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக தெரிவித்தார் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க.

இலங்கை மத்திய வங்கியின் தலைவர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது என்றும், விசாரணைக் குழு மத்திய வங்கியின் தலைவர் நிரபராதி என்று அறிவித்துள்ள காரணத்தினால் அவர் மீண்டும் தனது பணிக்கு திரும்பியிருப்பதாக கூறிய ரவி கருணாநாயக்க, இதில் எந்தவித தவறும் இல்லை என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறிய ரவி கருணாயக்க இவை அடிப்படையற்றவை என்றும் கூறினார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இரகசியமான முறையில் மேற்கொண்டுவந்த செயல்களை தமது அரசாங்கம் வெளிப்படையாக மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அமைச்சர் ரவி கருணாநாயக்க, இதன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் வீணான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் கூறினார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அப்போதைய மத்திய வங்கியின் தலைவராக செயற்பட்ட அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைத்த போதி



லும் அவை விசாரணை செய்யப்பட வில்லை என்று கூறிய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, எனவே தற்போதைய எதிர்க்கட்சிகளுக்கு இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு எந்த தகுதியும் இல்லை என்றும் விமர்சித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் கருவூல பத்திரங்களை விற்பனை செய்தபோது தனது மருமகனுக்கு சொந்தமான நிறுவனமொன்றுக்கு கூடுதல் சலுகைகளை பெற்றுக்கொடுத்ததாக இலங்கை மத்திய வங்கியின் தலைவர் அர்ஜுன் மகேந்திரன் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தின.

பிரதமரினால் நியமிக்கப்பட்ட குழு ஒன்று இந்த புகார்கள் குறித்து விசாரித்தது. சம்பந்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கும் மத்திய வங்கியின் தலைவருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று அந்த குழு தனது விசாரணை அறிக்கையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ரவிகரனுக்கு அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாளையொட்டி கடந்த ஆண்டு நவம்பர் மாதம 27ஆம் திகதிவிளக்கேற்றி நினைவு கூர்ந்தமை தொடர்பில் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை முல்லைத்தீவில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்ற இரு பொலிஸார் இது தொடர்பான அழைப்பா ணையை அவரிடம் வழங்கியுள்ளனர்.

கொழும்பு தலைமை அலுவலகத்திலிருந்து இந்த விசாரணை வலியுறுத்தல் வந்ததாகவும், இன்று காலை 10 மணியளவில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலையத்திற்கு நேரில் வந்து வாக்குமூலத்தை அளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## முன்னாள் அமைச்சர் ஜொன்ஸ்டனிடம் நிதிக்குற்றவியல் விசாரணை இன்று

முன்னாள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் இன்று விசாரணை நடத்த உள்ளனர்.

கடந்த காலங்களில் சதொச நிறுவனத்திடமிருந்து ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை பெற்றுக்கொண்டு அதற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் வாக்கு மூலமொன்றை பெற்றுக்கொள்ள இன்று நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமராக்க வேண்டுமென கோரி 8-ம் திகதி குருநாகலில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு தடை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு விசாரணை நடத்தப்படுவதாக மகிந்த தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர். குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர் ஒருவர் இந்த சூழ்ச்சித் திட்டத்தின் பின்னணியில் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஜொன்ஸ்டன்பெர்னாண்டோ இந்த வாரத்தில் கைது செய்யப்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-11)

## வெசாக் தின விபத்துக்கள்

### இருவர் பலி; 32 பேர் காயம்

(கொழும்பு)

வெசாக் கொண்டாட்டங்களை பார்ப்பதற்காக சென்றபோது ஏற்பட்ட விபத்துக்களில் இருவர் பலியானதுடன் 32 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கருவலகஸ்வெவ எனுமிடத்தில் லொறியும் டிரக்வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியுள்ளார். இந்த விபத்தில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த 22 பேரில் 10 ஆண்களும் 11 பெண்களும் அடங்குவர். காயமடைந்தவர்கள், தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் இரண்டு வாகனங்களின் சாரதிகளும் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பொலநறுவை மஹியங்கனை வீதியில் சுதுன்புர எனுமிடத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் மற்றும் லொறி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியுள்ளார்.

மேலும், வெசாக் தினத்தன்று இடம்பெற்ற ஏனைய விபத்துக்களில் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. (செ-11)

## நேபாள நிலநடுக்கத்தில் சிக்கிய

# 101 வயது முதியவர் ஒருவர் 7 நாட்களுக்குப் பின் மீட்பு

நேபாளத்தில் கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கிய 101 வயது முதியவர் 7 நாட்களுக்கு பிறகு உயிருடன் மீட்கப்பட்டார்.

நேபாள நாட்டை கடந்த 25-ம் திகதி பாரிய பூகம்பம் தாக்கியது, இதன் தாக்கம் இந்தியா, திபெத், வங்கதேசம் உள்ளிட்ட அண்டை நாடுகளிலும் உணரப்பட்டது.

இந்த பயங்கர நிலநடுக்கத்தில் தலைநகர் காத்மாண்டு உள்ளிட்ட பல பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டது.

சுமார் 1.60 லட்சம் வீடுகள் தரைமட்டமாகியதுடன் 80 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர்

இதுவரை 7300 பேர் பலியாகியிருப்பதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 2ஆம் திகதி நவ்காத் மாவட்டத்தில் இடிபாடுகளில் சிக்கிய பன்ச்சு தமாங் என்ற 101 வயது முதியவர் சிறு காயங்களுடன் உயிருடன் மீட்கப்பட்டார்.

உடனடியாக அவர் ஹெலிகொப்பட்டர் மூலம் மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார், தற்போது அவரின் உடல் நலம் தேறிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வாரமாக அவர் இடிபாடுகளில் சிக்கியிருந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இதே போல் சிந்துபால்சவுக் பகுதியிலிருந்து நேற்று 3 பெண்கள் உயிருடன் மீட்கப்பட்டனர் இவர்களில் இருவர் கட்டிட இடிபாடுகளில் இருந்தும், ஒருவர் நிலசரிவிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளார்.



அவர்கள் எத்தனை நாள் இடிபாடுகளில் சிக்கியிருந்தனர் என்பது உடனடியாக தெரியவில்லை. நிலநடுக்கம் ஏற்பட்டு ஒரு வாரம் கடந்து விட்ட நிலையில் இனிமேலும் யாரும் உயிருடன் மீட்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என கூறப்படுகிறது. இருப்பினும் தேடுதல் மற்றும் மீட்பு பணி கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (செ-11)


**வாடகைக்கு**

நல்லூரில் பகுதி வீடு (அனெக்ஸ்) வாடகைக்குண்டு. 3 பேர், இந்து சமயத்தவர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே:-0768680213

**தேவை**

துறைமுகம், விமான நிலையத்திற்கு 18-55 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விரைவாக தேவை. தங்குமிடம்/ உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும். இவ்வேலையில் பயிற்சி இல்லாதவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படும். உயர்ந்த சம்பளத்துடன் உடை இலவசமாகக் கொடுக்கப்படும்.

0759219226 (231)


**மெஹந்தி டிசைன்**

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரேபிய டிசைன்களில் மெஹந்தி அணிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
0778583330 ஆயிஷா (284)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கையில் மீண்டும் பனைவளம் புதுப்பொலிவுடன்



இலங்கையின் வடபகுதியில் பனைத்தொழில் வல்லுநர்களின் (தமிழரின்) நீண்டகால வேண்டுதலின் பேரில் எமது முயற்சியால் 1972ஆம் ஆண்டு மேமாதம் 1ஆம் திகதியன்று அன்றைய நிதி அமைச்சரினால் சட்டமாக்கப்பட்ட ''பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள்'' உதயமாகி இந்த மே தினத்தன்று 43 ஆவது வருடம் நிறைவு பெறுகின்றது என்ற நினைவூட்டலை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

ஆரம்ப காலத்திலிருந்து தென்கிழக்கு ஆசியாவிலே மிகச் சிறந்த கூட்டுறவு ஸ்தாபனம் என்ற புகழைப் பெற்ற இந்தச் சங்கங்களுக்கும் அவற்றை நடத்தும் நிர்வாகத்தினருக்கும் ஊழியர்கள் அங்கத்தவர்களான வல்லுநர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதேநேரத்தில் எமது முயற்சியினால் 1979 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட “ இலங்கைப் பனை அபிவிருத்தி சபை” மீண்டும் எமது அயராத உழைப்பினால் 01/05/2015 இல் இருந்து விசேடமான வகையில் தகுதி வாய்ந்த தலைமை மற்றும் நிபுணத்துவம் பெற்ற நெறியாளர்களுடன் வீறுநடை போடத் தொடங்குகிறது என்ற செய்தியையும் பனை தென்னை வளக் கூட்டுறவு சங்கத்தினதும் எல்லா வகையிலும் ஒத்தாசை உதவிகளை உடனுக்குடன் செய்யும் வகையிலும் அடாத்தாக பல மாதங்களாக பூட்டப்பட்டிருந்த திக்கம் வடிகாலை மீண்டும் இயக்கத் தொடங்கியுள்ள நல்ல செய்தியையும் நாட்டில் உள்ள அனைவருக்கும் தெரிவிப்பதில் மிகுந்த பெருமை அடைகின்றேன்.

**க.நடராசா, பனைசார் ஸ்தாபனங்களின் ஆரம்பகர்த்தா**

# வாக்காளர் பதிவுப் பத்திரம் 15ம் திகதி முதல் விநியோகம்

எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் வாக்காளர் இடாப்பு தொடர்பான பத்திரத்தை கிராம சேவகர்கள் வீட்டுக்கு வீடு சென்று விநியோகிப்பர் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இப்பணி ஜூன் மாதம் 15 ஆம் திகதி நிறைவு பெறும் என செயலகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் சேவை அவசியம் கருதி அக்காலம் நீடிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிராம சேவகர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

கிராம சேவகர் வழங்கும் பத்திரத்தை சரியாக நிரப்பி மீண்டும் கிராம சேவகரிடம் கையளிக்க வேண்டும்.

இந்த பத்திரத்தில் கையொப்பமிடும் நடவடிக்கை தேர்தல்கள் ஆணையாளரால் செப்டெம்பர் மாதம் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அடுத்த தேர்தலில் 2015 வாக்காளர் இடாப்பை பயன்படுத்த முடியும் என கூறப்பட்டுள்ளது. (இ-5)


## தேவை

அனுபவம் உள்ள, அற்ற 18-50 வயது ஆண்,பெண் தேவை. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/டொபி/பிஸ்கட்/கோடியல்/பால்மா/சொக்லெட்/PVC/காமெண்ட் போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி,லேபல்,பொதியிடல் ,களஞ்சிம்,Loading, Unloading போன்றவற்றில் பல வெற்றிடங்கள். சம்பளம் 18000/=,39000/= பெறலாம். உணவு,தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள்,குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலையில் வருகை தரும் நாளிலே வேலை.

தொடர்புக்கு-077 817 6234



"Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

**உரிய தருணத்தில் இலவச சட்ட ஆலோசனை, சட்ட சேவை மற்றும் வழிகாட்டல்கள்**

வாரத்தில் 5 நாட்கள் (திங்கள் - வெள்ளி ) காலை 9.00 - மாலை 5.00 மணிவரை

எம்மிடம் கீழ்வரும் விடயம் சம்பந்தமாக நீங்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

*சிறுவர் துஷ்பிரயோகம்*
*பாலியல் வன்முறைகள்*
*குடும்ப வன்முறைகள்*
*ஏனைய நெருக்கீட்டு நிலைமைகள்*

இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144

மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில்.



யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபி.கூ.சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

பதவி:- பொது முகாமையாளர் 05.05.2015
பதவி குறியீடு:- 101/8
சம்பளத்திட்டம்- 11200-14100 (66/2006)
120×10-130×10
வயது- 18-45
பால்: ஆண்

**கல்வித்தகைமை:**

அ.கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம்/10 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ.அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்க்பட்ட வர்த்தக /தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் (உ/த.சித்தி) க.பொ.த.(உ/த) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 20.05.2015**

குறிப்பு: மேற்குறிப்பிட்ட பதவிக்கு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக படிகள் வழங்கப்படும்.
(சுற்று நிருபம் 02/2012,02/2015)

வயதெல்லை கூட்டுறவுச்சங்கப் பணியாளருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
தலைவர்,
யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
இல.330, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்


## மரண அறிவித்தல்



### அமரர் மாணிக்கம் செல்லம்மா

யாழ். குட்செட் றோட் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ் சென்ற பண்டாரி சீதை அவர்களின் அன்பு மகள் மாணிக்கம் செல்லம்மா அவர்கள் 02.05.2015 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்ற மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சின்னாச்சி, முத்து, பொன்னர் அவர்களின் அன்புச் சகோதரியும், சரஸ்வதி, சிவலிங்கம், கிருஷ்ணானந்தம், சாரதாதேவி, பாலசுப்பிரமணியம் (கண்ணன்), சறோஜினிதேவி அவர்களின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, ஜீவரேகா, தர்மவதி, காலஞ்சென்ற நாகலிங்கம், தனவதி, பன்னீர்ச்செல்வம் ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதி ஈமக்கிரியைகள் 05.05.2015 செவ்வாய்க்கிழமை இன்று பகல் 10 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அறித்தருகின்றோம்.

**குட்செட் றோட்,
கோண்டாவில்.
தொடர்பு-
077 391 7166**

**தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 191**

## பொறாமையிலிருந்து விடுதலை

...**நீ**ங்கள் இந்தியாவில் சில இடங்களில் காணலாம்.... குரங்குகளைப் பழக்குவதையே வாழ்க்கையாகக் கொண்ட குரங்காட்டிகள் இருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு கோலை வைத்துக்கொண்டிருப்பார்கள். குரங்கைக் குத்தி, அவர்கள் சொல்வதை எல்லாம் செய்ய வைக்க, உபயோகப்படுத்திக் கொள்வார்கள். அவர்கள் கோலை ஆட்டி டான்ஸ் ஆடு ராமா டான்ஸ் ஆடு என்று சொல்வார்கள். குரங்கு நடனம் ஆடும். பிறகு அவர்கள் குட்டிக் கரணம் போடு ராமா! குட்டிக்கரணம் போடு என்று சொல்வார்கள். குரங்கு குட்டிக்கரணம் போடும். குரங்கு வெறுமனே கோலின் இசைக்கேற்ப ஆடும்.

அதுபோல நாடும் நமது வாழ்க்கையை நடத்த ஒப்பிடுதல் என்னும் கோலை அனுமதித்திருக்கிறோம். நாமும் அதன் இசைக்கேற்ப ஆடிக் கொண்டு நமக்கு இயல்பான விடயங்களைச் செய்யாமல் அந்தக் கோலின் கட்டளைக்கேற்றபடி செய்துகொண்டிருக்கிறோம்.

ஒப்பிடுதலுக்கும் நமது எதிர்பார்ப்புக்களுக்கும் ஒரு முடிவே கிடையாது. நாம் எப்பொழுதும் இன்னும் இன்னும், வேண்டும் என்றுகேட்டுக் கொண்டேயிருக்கிறோம். நீங்கள் தொடர்ந்து இந்த பதவிக்கும் அதிகாரத்திற்குமான எலி ஒட்டப் பந்தயத்தில் ஓடிக்கொண்டேயிருக்கிறீர்கள். பிறகு எவ்வாறு உங்களால் தளர்வாகவும் மகிழ்ச்சியாகவும் மனநிறைவுடனும் இருக்க முடியும்? மேலும் இந்த எலி ஒட்டப் பந்தயத்தில் ஒரு விடயம் என்னவென்றால் நீங்கள் வெற்றி பெற்றாலும் எலியாகத்தான் இருப்பீர்கள்!



ஆனால், எப்படியோ பிற்காலத்தில் ஒரு சமயத்தில் இந்த எலி ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெறுவது கூட மன நிறைவைக் கொடுப்பதில்லை என்பதைப் புரிந்துகொள்கிறீர்கள். வெற்றிகூட ஒரு அழகான திருப்தியற்ற. உணர்வை நோக்கியே இட்டுச் செல்கிறது. இதற்குக் காரணம், புறவுலகம் சார்ந்த பொருள் ரீதியான ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டே போதிலும் நீங்கள் எப்பொழுதும் உங்கள் இருப்புத் தன்மையை அலட்சியம் செய்தே வந்திருக்கிறீர்கள்.

அதிருப்தியின் அழைப்பு உங்கள் இருப்புத் தன்மையிருந்துதான் வருகிறது. அதை நீங்கள் புரிந்து கொள்ளும் பொழுது மிகவும் தாமதமாயினும் நீங்கள் ஆன்மீக த்தை நோக்கி திரும்புகிறீர்கள். ஆனால், அதைப் புரிந்துகொள்ளாத பொழுது நீங்கள் மனச்சோர்வை நோக்கித் திரும்புகிறீர்கள். ஏனெனில், உங்களுக்கு எங்கு தவற விடுகிறீர்கள் என்பது தெரியவில்லை; அந்த இழை எங்கேயென்று தெரியவில்லை; அதை எங்கே இழந்தீர்கள் என்பது தெரியவில்லை; எங்கே நீங்கள் தவறு செய்தீர்கள் என்பதும் தெரியவில்லை. (தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**




### உள்ளங்கைக்குள் ஒளிந்துகொள்ளும் இங்கிலாந்தின் மிகச்சிறிய நாய்க்குட்டி

இங்கிலாந்தின் வெஸ்ட் மிட்லாண்டில் வசிக்கும் நடாலி வேன்ஸ் என்பவருக்கு சொந்தமான நாய்க்குட்டி தான் டிஸ்னி, இல்லை, நாய்க்குட்டியை விட குட்டியான நாய்தான் டிஸ்னி.


கடந்த ஜனவரி மாதம் 3 நாய்க்குட்டிகளுடன் சேர்ந்து இந்த பூமிக்கு வந்த டிஸ்னியை நாய்க்குட்டி என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

ஒரு பூனைக்குட்டி போலவே தோற்றமளிக்கும் டிஸ்னியின் உயரமோ 3 இன்ச் தான் (7.62 செ.மீ). எடையோ 405 கிராம் மட்டுமே.



டிஸ்னியுடன் பிறந்த 3 நாய்க்குட்டிகளும்நெடுநெடுவென வளர டிஸ்னி மட்டும் வளர்ச்சியில் பின் தங்கிவிட்டது.

இதனாலே, மற்ற நாய்க்குட்டிகள் எல்லாம்டிஸ்னியை கேலிப பொருளாக்கி காயப்படுத்த, நடாலி அதை எப்போதும் தன்னுடனே வைத்துக்கொண்டு பாதுகாத்து வருகிறார். டிஸ்னியின் தற்போதைய வளர்ச்சி விகிதத்தை வைத்துக் கணக்கிடும் போது விரைவில் அது கின்னஸ் சாதனை படைக்கும் என்று இங்கிலாந்தின் பிரபல பத்திரிக்கையான மிரர் (mirror) தெரிவித்துள்ளது.




### *சீஸ் கார்லிக் சாண்ட்விச்*



**தே.பொருட்கள்:**

ஃப்ரெட் - 4 ஸ்லைஸ்

பூண்டு 4 பல்

சீஸ் ஸ்லைஸ் 4

பட்டர் 2 டேபிள் ஸ்பூன்

உப்பு, மிளகுத்தூள் -தே.அளவு

**செய்முறை**

பூண்டை தோலுரித்து பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். ஃப்ரெட்டின் மேல் பட்டர் தடவி அதன் மேல் சீஸ் ஸ்லைஸை வைத்து அதன் மேல் பொடியாக நறுக்கிய பூண்டை வைத்து அதன் மேல் மிளகுத்தூள் தூவி மேலே மற்றொரு சீஸ் ஸ்லைஸை வைத்து மூடி அதன் மேல் பட்டர் தடவிய ஃப்ரெட்டை வைத்து மூடி அவனில் 1 நிமிடம் பேக் செய்து பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மத்திய வங்கி

# 2015 மே 06 அன்று

# கிளிநொச்சிக்கு வருகிறது




## எமது பணிகள் ......

- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அத்துடன் வேளாண்மை வியாபாரங்களுக்கான கொடுகடன் வசதிகள்
- தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- கொள்வனவாளர்களுடன் சந்தை தொடர்புகளை உருவாக்குவதை வசதிப்படுத்துதல்
- மத்திய வங்கிப் பணிகளை வழங்குதல்:
  - நாணயத் தொழிற்பாடுகள்
  - ஊழியர் சேம நிதிய உறுப்பினர் பணிகள்
  - நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை
  - மத்திய வங்கியின் வெளியீடுகள்
  - சமூகப் பொருளாதாரத் தரவுகளைச் சேகரித்தல்
- விழிப்புணர்வை அதிகரித்தல்:
  - பணம், வங்கித்தொழில் மற்றும் நிதி
- நிதி மற்றும் நிதிசார் அறிவின் கிடைக்கும் தன்மையை மேம்படுத்துதல்

2015 மே 6ஆம் நாளன்று காலை 6.30 மணியிலிருந்து பொதுமக்கள் திறப்புவிழாவில் கலந்துகொள்வதற்காக கிளிநொச்சி அரச அதிபர் அலுவலகத்திலிருந்து அறிவியல்நகரிலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகம் வரையான போக்குவரத்து வசதிகள் மத்திய வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.




ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பன் விழாவில் ஜனாதிபதி



இலங்கைத் தமிழர்கள் வரலாற்றில் கடந்த 10 வருடமாக வெள்ளவத்தையில் ஒவ்வொரு வருடமும் கம்பன் விழா நடைபெற்று வருகின்றது. இவ்விழாவுக்கு உலக நாடுகளில் உள்ள தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள் கலந்து கொள்வது வழக்கம். இம்முறையும் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் அரங்கில் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடைபெற்றது. இதில் நேற்று முன்தினம் மூன்றாம் நாள் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார். கம்பன் கழகத் தலைவரினால் ஜனாதிபதிக்கு மிகப்பிரமாண்டமான கௌரவம் வழங்கப்பட்டது.

## அரசாங்க நிறுவனங்களில் இலவச வைபை வலயங்கள்

அரசாங்க நிறுவனங்களில் இலவச வைபை வலயங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இலவச வைபை வலயங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அதன் திட்ட முகாமையாளர் கவாஸ்கர் சுப்ரமணியம் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் நிலையங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேருந்து தரிப்பிடங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் தற்போது இலவச வைபை சேவை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்களில் சேவையை பெற்றுக்கொள்ளும் மக்களும் இந்த இலவச வைபை சேவையின் ஊடாக மேலும் நன்மையடைவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தனியார் சம்பள உயர்வு ஓர்துரோகச் செயலாகும்

### தொழிற்சங்கத் தலைவர் சுட்டிக்காட்டு

தனியார்துறை ஊழியர்களுக்கான சம்பள உயர்வு யோசனை ஓர் துரோகச் செயலாகும் என தொழிற்சங்கத் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை 5000 ரூபாவினால் அதிகரிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.

2500 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக முன்னதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. எனினும் தற்போது அந்தத் தொகை 1500 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

ஒரே தடவையில் 2500 ரூபா சம்பளத்தை வழங்காது, மே மாதம் 1500 ரூபாவும் அடுத்த ஜனவரி மாதம் முதல் மேலும் 1000 ரூபா சம்பள அதிகரிப்பும் வழங்கப்பட உள்ளது.

தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்கள் குறைக்கப்பட்டமையின் பின்னணியில் நல்லாட்சி அரசாங்கத்தின் சில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

ஏனெனில் குறித்த அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சில நிறுவனங்களை நடத்தி வருகின்றனர்.

இதனால் தான் சம்பள உயர்வை அதிகளவில் வழங்குவதற்கு அவர்கள் விரும்பவில்லை.

வாக்குறுதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில் சம்பள உயர்வு 2500 ரூபாவினால் உயர்த்தப்பட வேண்டுமென வசந்த சமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 4 1/2 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில் லண்டன் NOT PR<br>தொ.இ: B/4431 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 23 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: CBF, DFA/ வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: G/4441 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 32 செவ் 2 இல்<br>உயரம்: 182cm<br>தகைமை/தொழில்MSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4434 | பிறப்பு: 1986 RC<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 16 1/2<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/4443 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 10 1/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L சுவிஸ்<br>தொ.இ: B/4435 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 22 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/4444 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 30 செவ் 8 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: NCT/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4436 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 43 செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: MSC<br>தொ.இ: G/4445 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

05.05.2015

(சித்திரை 22, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

பிரதமை முற்பகல் 9.57 மணிவரை

விசாகம் முற்பகல் 11.53 மணிவரை

இராகுகாலம் 2.56-4.26 மணிவரை

சுபநேரம் 10.26-11.56 மணிவரை

வளவன்

**மேடம்:** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை.

**இடபம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** ஆரோக்கியமான நாள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான சூழ்நிலை உருவாகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், விருந்தினர்களின் வருகையுண்டு, கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காண வேண்டிய நாள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வங்கியில் வைப்பினை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், எடுத்த செயலை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் உங்களுக்கு உதவ முன்வருவர்.

**துலாம்:** எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கப் பெறுவீர்கள், புதிய பொறுப்புக்களுடன் பதவிகள் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணவரவு திருப்தி தரும், விரும்பிய காரியம் விரும்பியபடியே நடைபெறும் நாள், பயணங்களால் பலனுண்டு, ஆன்மீக சிந்தனை [illegible] போசன [illegible]

**தனுசு:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், காரிய அனுகூலமுண்டு, திட்டமிட்ட காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்கள் நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், தொழில்ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலுள்ள இளைஞர், யுவதிகளை பொலிஸில் இணையுமாறு அழைப்பு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் விடுத்தார்

(யாழ்ப்பாணம்)

**யாழில் உள்ள இளைஞர், யுவதிகளை பொலிஸில இணையுமாறு யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி விஜயசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்றுக்காலை கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைப்பது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று கொடிகாமத்தில் மக்கள் பிரதிநிதிகளுடன் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்ட வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.தமிழ் பிரதேசங்களில் கடமை யாற்றுவதற்கு தமிழ் பேசும் பொலிஸார் பற்றாக்குறையாகவுள்ள நிலையில் தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணைவதன் மூலம் அதனை நிவர்த்தி செய்து தமது மக்களுக்கு தமிழ் மொழி மூலம் சேவையாற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடிப்படைத் தகைமைகளாக, பதினெட்டு வயது முதல் இருபத்து எட்டு வயது வரையான திருமணம் ஆகாதவர்களாகவும், கா.பொ. சாதாரணதர பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இரண்டு தடவையில் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரர்கள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்திய டைந்திருத்தல் வேண்டும்.

பௌதீக தகைமைகளாக, உயரம் 5 அடி 6 அங்குலமும் (ஆகக் குறைந்தது) மார்பு 30 அங்குலமாகவும் ஆகக்குறைந்து (மூச்சு விட்ட நிலையில்) இருத்தல் வேண்டும். கொடுப்பனவுகளாக வருடத்திற்கான ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2, 2,880 - ரூபா இரண்டு இலட்சத்து 54 ஆயிரத்து 100 ரூபா வழங்கப்படும். கடின கொடுப்பனவாக மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இணைந்த கொடுப்பனவுகளாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேச ங்களில் சேவையின் பொருட்டு மாதாந்தம் 10 ஆயிரத்து 500 ரூபாவும் ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 8 ஆயிரத்து 400 ரூபாவும் வழங்கப்படுவதோடு வேறு கொடுப்பனவில் சீருடை கொடுப்பனவாக 250 ரூபாவும் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களை இவ்வருட மார்ச் மாதம் இருபதாம் திகதிய 1907 ஆம் ஆண்டு இலக்க அரசாங்க வர்த்தமானியிலும் மற்றும் www.police.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிட முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 29 ஆம் திகதியாகும்.

யாழ்.மற்றும் பிற நகரில் உள்ள புத்தகசாலைகளில் விண்ணப்ப படிவ ங்களைப் பெற்று பணிப்பாளர், பொலிஸ ஆட்சேர்ப்பு பிரிவு, இலக்கம் 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்த, கொழு ம்பு 6 எனும் முகவரிக்கு விண்ணப்பங் களை அனுப்பி வைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)






பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் *தடம் பதித்த தமிழ்த்தேசியம்* எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு சட்டத்தரணி கனகமனோகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூல் வெளியிடப்படுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

# இழப்புக்களிலிருந்து மீண்டெழும் திட்டத்தை உருவாக்க வேண்டும்

## வடக்கு மாகாண சபையிடம் கூட்டுறவு ஊழியர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இழப்புக்களில் இருந்து மீண்டெழும் திட்டமொன்றினை வடக்கு மாகாண சபை ஏற்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ள வட மாகாண கூட்டுறவுத்துறை ஊழியர்கள், வடக்கு மாகாண கூட்டுறவு பணியாளர்களின் சம்பளத்தில் 25 வீதத்தினை வடக்கு மாகாண சபை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமெனவும்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபை இக்கோரிக்கையினை ஏற்றுக்கொள்வதன் மூலம் வடக்கில் சரிவுற்றுள்ள கூட்டுறவுத்துறையினை மீண்டும் தலை நிமிர்த்த முடியுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணம் கடந்த பல தசாப்தங்களாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது. இதில் 2009 இற்கு முன்னர் வடக்கு மாகாணம் கூட்டுறவுத்து றையில் முன்னேற்ற நிலையில் காணப்பட்டிருந்த போதிலும் யுத்தத் திற்கு பின்னர் பெரும் சரிவினை கண்டுள்ளன.

யுத்த காலப்பகுதியின் போதும் இடப்பெயர்வுகளின் போதும் கூட்டுறவு ஊழியர்கள் நியாயத்துடன் தான் இருந்தார்கள்.அதனால்தான் கொடும் போரின் பின்னரும் கூட கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்டங்கள் மீண்டெழு ந்துள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட கூட்டுறவுத்துறையினை கட்டியெழுப்புவதற்கு வடக்கு மாகாண சபையின் அதிகாரத்திற்குள் கூட்டுறவு நிதியமொன்றினை ஆரம்பித்து அதனூடாக வடக்கு மாகாண கூட்டுறவுத் துறைக்கு தேவையான அபிவிருத்திகளை மேற்கொள்ளமுடியும்.

இந்நிதியத்தினூடாக கூட்டுறவு ஊழியர்களின் சம்பளத்தில் 25 வீதத்தினை தொடர்ந்தும் வழங்கவும் முடியும்.

குறிப்பாக வடக்கு மாகாண சபை இழப்புக்களில்இருந்து மீண்டெழும் முறையினை ஏற்படுத்த வேண்டும்.

மாகாணத்தில் பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஊழியர்களுக்கும் சிக்கன கடன் வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்த வேண்டும். கூட்டுறவுத்துறையில் 10 தொடக்கம் 12 வருடங்களாக பணியாற்றும் ஊழியர்களினை நிரந்தரமாக்க வேண்டும்.உயர் பதவிகள் வழங்கப்படும் போது அனுபவ அடிப் படையில் வழங்கப்படவேண்டும்.

அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு, விடுமுறைகள் போன்று கூட்டுறவு ஊழியர்களுக்கும் வழங்குவதன் மூலம் படித்த இளைஞர்களை இத்துறைக்குள் உள்வாங்க முடியும்.

வடக்கு கூட்டுறவுச் சபையின் தலைமைக்காரியாலயம் அமைப்பதற்கு மாங்குளத்தில் ஒரு ஏக்கர் காணியினை வடக்கு மாகாண சபை வழங்க முன்வரவேண்டும்.

கூட்டுறவாளர்களின் பணியை கௌரவிக்கும் பொருட்டு கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் படம் பொறித்த முத்திரைகள் வெளியிடப்பட வேண்டும்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் வீரசிங்கத்தின் உருவச் சிலை அமைக்க முன்வரல் வேண்டும் எனப்பல கோரிக்கைகள் வடக்கு மாகாண சபையிடம் கூட்டுறவாளர்களால் முன்வைக்கப்பட்டிருந்தன.இக்கோரிக்கைகள் அனைத்தும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தின் போது முன்வைக்கப்பட்டிருந்ததெனக் குறிப்பிடத்தக்கது. (இ-4)

# நோய்த் தொற்றிலிருந்து கோழிகளை பாதுகாக்கவும்

யாழ்.குடாநாட்டில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்கள் கோழிகளை நோய்த் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்காக அந்தந்த பிரதேசங்களில் உள்ள கால்நடை வைத்திய நிலையங்களில் வருமுன் காக்கும் தடுப்பு முறைகளை உரிய முறையில் கேட்டறிந்து பின்பற்றுவதன் மூலம் கோழிகளுக்கு ஏற்படும் நோய்த் தொற்றைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என வடமாகாண கால்நடை மற்றும் சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் சி.வசீகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் கோழிப் பண்ணையாளர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். சில பண்ணையாளர்கள் அசண்டையீனம் காரணமாக கோழிகளை உரிய முறையில் வளர்ப்பதில்லை. இதனால் கோழிகளுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டு அது அனைத்து இடங்களுக்கும் பரவும் சந்தர்ப்பம் ஏற்படுவதோடு வாழ்வாதாரமும் பாதிப்படைகிறது.

ஒவ்வொரு கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் இலவசமான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் மாதாந்தம் பயிற்சி வகுப்புகள் இடம்பெறுகின்றன. இவற்றை உரிய முறையில் கடைப்பிடித்தால் சிறந்த பயனை பெற முடியும்.

இதுவரை கோழி வளர்ப்பு பண்ணையாளர்களுக்கு இலவசமாக கொடுத்து வந்த றனிகட் தடுப்பு மருந்து கடந்த இரண்டு மாதங்களாக காசுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. எமது மீண்டு வரும் செலவீனத்தில் இந்த தடுப்பு மருந்து வாங்கி விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு வருடத்துக்கு 2.2 மில்லியன் டோஸ் றனிகட் தடுப்பு மருந்து எமக்கு தேவைப்படுகின்றது. பேராதனையில் அமைந்துள்ள மத்திய கால்நடை ஆய்வு நிலையத்தில் இயந்திர பழுது காரணமாக எமக்கு அந்த தடுப்புமருந்து அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. எமது கோரிக்கையை அடுத்து இன்னும் ஓரிரு மாதங்களில் அந்த தடுப்பு மருந்து மத்திய அரசின் ஊடாக எமக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம், அதன் பின்னர் இலவசமாக றனிகட் தடுப்பு மருந்து பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை அளவெட்டி கணேஸ்வரம் அருள்மிகு குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா- 06.05.2015



## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி

அளவெட்டிக் கிராமம் பல ஆலயங்களை தன்னகத்தே கொண்டு ஆன்மீகத்திலும் அறநெறியிலும் சிறந்து விளங்கிய கிராமமாகும். வரலாற்று பெருமைமிக்க ஆலயங்களையும் அவற்றை பேணிக்காத்து வருகின்ற பெருமையும் கொண்டுள்ளது.

அளவெட்டி கணேஸ்வரம் பகுதியில் அமைந்துள்ள குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயம் சிறப்புமிக்கது. இப்பிரதேசம் போரினால் பாதிக்கப்பட்டிருந்த போதும் இவ்வாலயத்தை புனர்நிர்மாணம் செய்து மஹாகும்பாபிஷேகத்தை நடத்தவுள்ளமை இவ்வாலய அடியார்களின் தெய்வீகப் பணியை எடுத்துக் காட்டுகின்றது. எல்லோருக்கும் மனநிறைவையும் தருகின்றது.

நாளை 06.05.2015 அன்று நடைபெறவிருக்கும் மஹாகும்பாபிஷேகத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் எமது ஊர்க்கிராமம் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இப்பிள்ளையார் ஆலயம் இப்பிரதேச அடியார்கள் வேண்டுவனவற்றை நிறைவேற்றியுள்ளது. இன்று எமது கலாசார விழுமியங்களை இழந்து நிற்கின்ற வேளையில் இவ்வாலயத்தின் திருப்பணியினை நிறைவேற்றுவது மிகக்கடினமான காரியமாகும். எனவே இவ் அடியார்களின் தெய்வீகப் பணி போற்றுதற்குரியது.

இன்று இவ்வாலயம் புதுப்பொலிவோடு விளங்கி மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்ற வேளையில் அடியார்களுக்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருட்காட்சம் கிடைக்கவும் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாகவும் நடைபெற விநாயகப் பெருமானின் திருவடிகளை வணங்கி எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நா.வேதநாயகன், அரச அதிபர்,
யாழ்ப்பாணம்.

## விநாயகர் திருவருள் பொலிக

சைவசமயத்தில் மக்கள் அனைவரதும் முதல்வழிபாடு விநாயகர் வழிபாடாகும். இது யாவரும் அறிந்ததே. அதற்குக் காரணம் இறைவன் விநாயகப் பெருமானுக்கு கொடுத்தவரமாகும்.

என்னரேயாயினும் யாவதொன்றெண்ணினால்
முன்னரேயுன்னதாள் முடியுறப்பணிவரேல்
அன்னர் தம் சிந்தைபோலாக்குதி- அல்லரேல்
நன்னலர் தங்களை ஊறுசெய்திடுதி

என கந்தபுராணம் எடுத்துக் காட்டுகின்றது.

அந்த வகையில் விநாயகர் ஆலயங்கள் நிறைந்த கிராமம் அளவைப்பதி கணேஸ்வரம் எனும் அருள்மிகு குருக்கள் கிணற்றடி விநாயகர் கோவில் பல்லாண்டுகட்கு முற்பட்டது.

இந்த ஆலயத்தில் விநாயகப் பெருமானுக்கு அனைத்து விழாக்களும் ஆகம முறைப்படி சிறப்புற நடைபெற்று வருகின்றன. மஹோற்சவம் ஆடிப் பௌர்ணமி தினத்தை இறுதி நாளாக தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது.

இவ்வாலய கும்பாபிஷேகம் கடந்த பன்னிரு வருடங்களுக்குப் பின்னர் ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு இன்று சிறப்புடனும் சீருடனும் பெருஞ்சாந்தி விழாவாக நடைபெறுகின்றது. இவ்வாலயத்தின் திருப்பணி வேலைகளைச் செய்வதற்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் விநாயகர் திருவருள் பொலிய பிரார்த்திக்கின்றேன்.

பிரம்மஸ்ரீ
சி.இராஜேந்திரசர்மா
(ஆலய அர்ச்சகர்)





## அளவெட்டி, கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய தலவரலாறு

வலிகாமம் வடக்கில் தெல்லிப்பழை, அளவெட்டி ஆகிய கிராமங்களின் எல்லையில் அமைந்துள்ள அம்பட்டாவத்தை என்னும் குறிச்சியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இன்று அம்பட்டாவத்தை என்னும் குறிச்சி அளவெட்டிக் கிராமத்துடன் பூரணமாக இணைக்கப்பட்டுவிட்டது. அம்பட்டாவத்தை என்பதும் கணேஸ்வரமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இன்று கணேஸ்வரம் பகுதி ஒரு தனிக் கிராம உத்தியோகத்தர் பிரிவாக இயங்கி வருகின்றது.

இவ்வாலயம் ஏறக்குறைய 700 வருடங்கள் பழைமையானது என்பர். இவ்வாலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமாகும். ஈழத்திலே அந்நியராட்சிக் காலத்திலே சைவ ஆலயங்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி இவ்வாலயத்திலும் மேற்கொள்ளப்பட்டது. அந்நியராட்சியிலிருந்து ஆலயத்தைப் பாதுகாக்க மூலமூர்த்தியாகிய விநாயகனின் விக்கிரகத்தை ஊரவர்கள் கிணற்றினுள்ளே போட்டுவிட்டார்கள். சிலநூறு வருடங்கள் கழிந்தன. கிணறும் தூர்ந்துவிட்டது.

நாளடைவில் கோயில் குருக்கள் புதுக்கிணறு வெட்ட முற்பட்டார். கிணறு அமைப்பதற்குரிய இடமாகப் பழைய கிணறு இருந்த இடமே சோதிடர்களால் காட்டப்பட்டது. கிணற்றை வெட்டிச் சென்றபோது விநாயகர் விக்கிரகத்தைக் கண்டெடுத்தார்கள். கிணற்றிற்கு அருகாமையில் விநாயகர் விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்தனர். இதனால்தான் குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோயில் என்ற பெயரும் ஏற்பட்டது. ஊரவர்களின் முயற்சியால் ஆலயம் சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது.

இக்கால எல்லையில் சம்பந்த ஞானியார் என்ற பெரியவர் இவரைச் சித்தர் என்றே சொல்கிறார்கள். ஆலயச் சூழலில் அமர்ந்து விநாயகனை நாடோறும் வழிபட்டு வந்தார். ஊரவரின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவரானார். ஆலயச் சூழலிலேயே சிவகதி அடைந்தார். ஆலய முன்றலிலேயே ஊரவர்கள் இவரது சமாதியை அமைத்தார்கள். இச்சமாதியில் இருந்து ஆல், அரசு, வேம்பு என்ற விருட்சங்கள் இயற்கையாக முளைந்தெழுந்தன. இன்றும் இவை ஆலய முகப்பில் தலவிருட்சங்களாக அமைந்து நன்னிழல் பரப்பி வருகின்றன. இவ்விருட்சங்களின் கீழ் வைரவர் ஆலயத்தை அமைத்து வழிபட்டு வந்தனர். 1986 இன் பின்னர் தான் உள்வீதியில் ஒரு வைரவர் ஆலயம் அமைக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட தலவரலாறு எனதுஆசிரியப் பெருந்தகை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மூலம் அறிந்து கொண்டவையாகும். 1960 தொடங்கி 1965 வரை அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தில் அவர் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர் பாடசாலைக்குச் செல்லும் வழியில் இவ்வாலயம் அமைந்திருந்ததால் நாடோறும் விநாயகனை வழிபடும் பேறுபெற்றார். விநாயகன் மீது பெரும் பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தலைமை பதவி வகித்த காலத்தில் அவர் இவ்வாலயத்தை ஆதரிக்கத் தவறியதில்லை. அப்பணியை தற்போதைய தலைவர் ஆறுதிருமுருகன் அவர்களும் அடியொற்றி வருகிறார்கள். விநாயகப் பெருமானை நம்பிக்கையோடு வழிபட்டுவந்த ஊரவர்கள் இன்று நல்லநிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அதேநேரத்தில் இவ்வாலயச் சூழலில் அநீதியாக நடந்து கொண்டவர்கள், முக்கியமாக சண்டித்தனம் செய்தவர்கள், அன்றையநாளிலிருந்து ஆலயத்திற்கு வரமுடியாத நிலையை அடைந்தார்கள். அவர்களுடைய வாழ்வும் ஆறுமாத காலத்தில் அல்லது ஒரு வருட காலத்தினுள் முடிவுற்றதையும் கண்கூடாகக் கண்டுள்ளோம். காலத்திற்குக் காலம் திருப்பணிகள் இடம்பெற்றன. 2013 இல் அன்னதான மடமும் கட்டி முடிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பாலஸ்தாபனம் செய்த பின்னர் மேற்கொண்ட திருப்பணி வேலைகள் விநாயகன் திருவருளால் பெரும்பான்மையும் பூர்த்தியடைந்து நாம் எதிர்பா ராத வகையில் ஆலயம் மிகப் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. பல பரிவாரத் தலங்கள் அமைந்துள்ள தோடு அவற்றுக்குரிய உற்சவங்களும் சிறப்பாக நடை பெற்று வருகின்றன. ஆடிப்பௌர்ணமியை தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் ஆண்டுப் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றன. நாளை 06.05.2015 புதன்கிழமையன்று நடை பெறும் திருக்குடமுழுக்கு விழாவில் தவறாது அடியவர்கள் எல்லோரும் கலந்து கொண்டு நற்பேறுகளைப்பெற்றுக்கொள்ளு மாறு அன்புடன் வேண்டுகின் றோம்.

செ. இராஜகுலேந்திரன், தலைவர், ஆலய நிர்வாக சபை.

## அறப்பணிகள் தொடரட்டும்

சைவ சமயம், ஆன்மீகம், சமுதாயம் ஆகியவற் றின் வளர்ச்சிக்கான அனைத்து வளங்களும் நிறை ந்த அளவைப் பதியில் ம கோவில் கொண்டு எழுந்த ருளியுள்ள கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநா யகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பா பிஷேகம் சிறப்புற நடைபெற பிரார்த்திக்கின்றேன். இக்கும்பாபிஷேகம் கிராம மக்கள் அனைவரது வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் எழுச்சியாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ஆன்மீகப் பணிகளுடனும் மட்டுமன்றி அறப்பணிகள் அன்னதானப் பணிகள் சிறப்புடன் தொடர்ந்து நடைபெற விநாயகர் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**
**வேதாகம கிரியாபானு**
**சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் (பிரதிஷ்டா பிரதம குரு)**



## "கவினுறு ஆலயப் பேறிது"

பல்லவி

காத்தருள்வான் குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார்,
கவினுறு ஆலயத்தில் பேறாகும் வள்ளலார்,
பூத்திருக்கவே மஹா கும்பாபிஷேகம் பார்த்திட
புண்ணியம் கிடைக்கும் நீங்கள் எண்ணியது பலித்திட

அனுபல்லவி

பார்த்து விட்டால் போதும் பயமில்லை அவனைப்
பணிந்து விட்டால் போதும் துயரில்லை.
ஷேத்திர மகிமைதன்னை ஆல், அரசு, வேம்பு, சொல்லும்
சித்தாரம் சம்பந்த முனிவர் முத்திபெற்ற வரமதனால்,

சரணம் (மத்திமகாலம்)

மூத்த பெருங்குடி அளவையம் பதியில்
முறைப்படியே வாழ்ந்த காலமதில்
மோகமான பிற நாட்டவர் வந்து
முற்றாகவே சைவம் வாழத் தடுத்தனர்
பாத்திரமான பிள்ளையோ பாதுகாப்பாய்
கிணற்றில் மீண்டதனால்
பத்திரமாய் இன்றும் கோவிலில் திருவருள்
பாலித்திடும் சித்தி தந்திடவே

கலாபூஷணம் கே.எஸ்.சிவஞானராஜா,
அளவெட்டி.

**மகா கும்பாபிஷேகம்:**
**06.05.2015 புதன்கிழமை காலை 9.15 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள சுப வேளையில்.**


விளம்பர அனுசரணை

நாராயணா ஹார்ட்வெயர் ரேடர்ஸ்
92C, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சிவராம் நகைத் தொழிலகம்
நா. சிவராசா
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

விநாயகர் சைவ உணவகம்
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

விநாயகர் களஞ்சியம்
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

சக்தி பல்பொருள் வாணிபம்
கணேஸ்வரம்,
அளவெட்டி.

அனோஜன் ரேடர்ஸ்
காங்கேசன்துறை வீதி,
மல்லாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினை தேசியப்பிரச்சினை

## மணிசங்கர் ஐயர் தெரிவிப்பு

மீனவர்களின் பிரச்சினை குறித்து இந்தியாவும் இலங்கையும் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என இந்திய காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக மீனவர்களின் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு இலங்கையுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பேச்சுவார்த்தைகள் மூலம் மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும் இதில் எவ்விதமான உரிய நடவடிக்கைகளும் எடுக்கபடவில்லை என மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார். (இ-5)



லெம்பேர்ட்டை தலைமை ஆசிரியராகக் கொண்ட உழவன் மாத இதழ யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் SOLID நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் சிவயோகநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்க (SEEDCO) முன்னாள் பண்ணை முகாமையாளர் கணேசலிங்கம், பொதுமுகாமையாளர் ரவிமயூரன், சாவகச்சேரி பொது வைத்தியசாலை டாக்டர் அல்பேட்குரூஸ் மற்றும் ஆர்வலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# 2016 இல் மேதினம் பிரதமர் மகிந்தவுடன்

## மகிந்தானந்த ஆரூடம்

(கொழும்பு)

**2016ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள மே தினத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டாடுவோம் என முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் மே தினத்தில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக மகிந்த ராஜபக்ஷவும் காணப்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் கீழ் கொண்டாடுவோம் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சி தற்போது மே தின கூட்டத்தை நடத்தி, தொழிலாளர்களின் உரிமைகள் குறித்து பேசுவது நகைப்பை ஏற்படுத்துகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

### பெண் குழந்தையை பெற்றெடுத்த

# வில்லியம்- கேத் மிடில்டன் தம்பதிக்கு ஒபாமா வாழ்த்து

பெண் குழந்தையை பெற்றெடுத்த இங்கிலாந்து இளவரசர் வில்லியம்-கேத் மிடில்டன் தம்பதிக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ்-டயானா தம்பதியரின் மூத்த மகன் இளவரசர் வில்லியம் (வயது-32), கேத் மிடில்டனை (வயது-33) காதலித்து 2011 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் திருமணம் செய்து கொண்டனர்.

இந்த தம்பதியருக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலில் ஆண் குழந்தை பிறந்தது. அந்த ஆண் குழந்தை இளவரசர் ஜார்ஜ் என்ற பெயரிட்டு வளர்த்து வருகிறார்கள். இந்நிலையில் மீண்டும் கர்ப்பம் அடைந்த கேத் மிடில்டனுக்கு மேமாதம் 2 ஆம் திகதி உள்ளூர் நேரப்படி காலை 8.34 மணிக்கு சுகப்பிரசவத்தில் 3.700 கிலோ எடை கொண்ட அழகான பெண் குழந்தை பிறந்தது.

பெண் குழந்தையை பெற்றெடுத்த வில்லியம் - கேத் மிடில்டன் தம்பதிகளுக்கு உலகம் முழுவதுமிருந்தும் வாழ்த்துகள் குவிந்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், அவரது மனைவி மிச்சேல் ஒபாமாவும் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் "புதிய குழந்தையின் வரவால் தம்பதியரின் குடும்பத்தில் ஆனந்தமும் மகிழ்ச்சியும் பெருகட்டும்" என தெரிவித்துள்ளார்கள். (இ-5)

# மின்சாரத் தடைபற்றிய அறிவித்தல்

வடமாகாணத்தில் உள்ள சில பிரதேசங்களில் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 5 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 10 ஆம்திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இன்று யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மாதகல், மாதகல் ஜெற்றி, ஜம்புகோளப்பட்டினம், கட்டுப்புலம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப் படை ஓய்வுக்கால விடுதி ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் மாமடுவில் இருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரம்பன் மடு, CEC கல்லுடைக்கும்ஆலைஆகியஇடங்களிலும்,

மன்னார் பிரதேசத்தில் தோமஸ்புரி, வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்ப்பாசன திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும்,

நாளை 6 ஆம் திகதி புதன்கிழமை வவுனியாபிரதேசத்தில் வீரபுரம் ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரம், எள்ளுப்பிட்டி ஆகிய பிரதேசங்களிலும்,

நாளை மறுதினம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்தில் நகுலேஸ்வரம், மாவைகலட்டி, கொல்லன்கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, கீரிமலை துணைக்கடற்படை முகாம், காங்கேசன்துறை, வயாவிளான், டொலர் கூட்டுத்தாபனம், கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம், பலாலி இராணுவத் தலைமைக்காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுக்கால விடுதி ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சிப் பிரதேசத்தில் வடக்கச்சி ஒருபகுதி, இராமநாதபுரம் விமானப் படை I மற்றும் II ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் மாமடுவில் இருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரம்பன் மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்,

மன்னார் பிரதேசத்தில் முதலைக்குத்தி ஆகிய இடத்திலும்,

எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். பிரதேசத்தில் உசன், விடத்தற்பளை, கெற்பேலி, கிளாலி, மாதகல், மாதகல் ஜெற்றி, ஜம்புகோளப்பட்டினம், கட்டுப்புலம், சங்கானை, சங்கானை வைத்தியசாலை, தொட்டியாலடி, பண்டத்தரிப்பு ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சியிலும் முள்ளிவாய்க்கால், கரைச்சிக்குடியிருப்பு, வட்டுவாகல் கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர், பட்டக்காடு பிரதேசம், வேப்பம்குளம்,நெளுக்குளம், பம்மைமடு, மாமடுவில் இருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரம்பன்மடு, ஒமேகாலைன், தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக விடுதி, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்,

9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.பிரதேசத்தில் நாவற்குழி, கைதடி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி,கைதடி, நுணாவில், மட்டுவில், வாகையடி, அறுகுவெளி, வடமாகாண சபை அலுவலகம் கைதடி, சங்கத்தானை, சாவகச்சேரி, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம், அரசடி, சம்பந்தர் கடை, கிழவித்தோட்டம், யாக்கரு, கலிகை, துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திர அம்மன் கோவிலடி, கப்பூது, கல்வயல், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக்கட்டடத் தொகுதி, துணவி, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, தொல்புரம், சங்கானை, சாந்தை, சில்லாலை, சீரணி, சண்டிலிப்பாய், ஆலங்குளாய், வட்டுக்கோட்டை ஒரு பகுதி, தொட்டியாலடி, பிரான்பற்று, மாரீசன் கூடல், சேந்தான்குளம், இள வாலை, பெரியவிளான், [illegible]டான், சுழிபுரம், ஜம்புகோளப்பட்டினம், சங்குவேலி ஒரு பகுதி, மெமோறியல் லேன், ஆனந்தா வீதி, மானிப்பாய் இணுவில் வீதி, மானிப்பாய் நகரம், சுதுமலை அம்மன் கோயிலடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் கார்கில்ஸ் பீஎல்சீ ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி பிரதேசத்தில் பல்லவராயன் கட்டு, வலைப்பாடு, வேரவில், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், தேராவில், புதுக்குடியிருப்பு உடையார்கட்டு, கைவேலி, தேவிபுரம், இரணைப்பாலை, கோம்பாவில், சுதந்திரபுரம், வள்ளிபுனம், முறிப்பு, குமுழமுனை, தண்ணிமுறிப்பு, பூதன்வயல் 651 ஆவது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலைஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் கோவில்குளத்தில் இருந்து சிதம்பரபுரம் வரை, சூசைப்பிள்ளையார்குளம், பஜார் வீதி, வவுனியா நகரம், மாமடுவில் இருந்து மகாகச்சக்கொடியவரை பொகவஸ்வேவ, சளலிங்கம நமலகம, பிரப்பன்மடு, நாகேந்திரம் அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை, S.V அரிசி ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த யாழில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப் படுத்துவது தொடர்பாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடனான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். மாவட்ட செயலர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் தற்போது பல குற்றச் செயல்கள் அதிகரித்து காணப்படுகின்றன. குறிப்பாக வாள் வெட்டுச் சம்பவங்கள், போதைப் பொருள் பாவனை என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. குற்றவாளிகள் இனம்கண்டு தண்டிக்கப்படாததால் குற்றங்கள் அதிகரித்து செல்கின்றன.

எனவே இவற்றினைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் சிவில் சமூக பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளேன். இக் கலந்துரையாடலில் குடாநாட்டில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களை தடுப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1132

## கல்விச் செல்வம்

இலட்சுமணன் என்ற ஏழை விவசாயிக்கு தனராஜ் என்ற ஒரேயொரு மகன் இருந்தான்.

மிகக் கடினமாக உழைத்து அரை வயிற்றுக்கு சாப்பிட்டு வாழ்க்கை நடத்தி வந்த இலட்சுமணனின் ஒரே ஆசை, தன் மகனாவது பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்பதே!



ஆனால், தனராஜ் பள்ளிக்குச் செல்வதையே வெறுத்தான். உடல் உழைப்பது அவனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. உடல் நோகாமல் பணம் சம்பாதிக்க எண்ணினான்.

ஒருநாள், கிராமத்தின் எல்லையில் இருந்த மலைக் குகையில் ஒரு யோகி வந்து தங்கியுள்ளார் என்று கேள்விப்பட்டான்.

அவர் காலையில் நதியில் நீராடி முடித்த பின் குகைக்குத் திரும்பும் வேளையில் யார் முதலில் தென்படுகிறானோ, அவனுக்கு அவன் விரும்பிய வரம் அளிப்பார் என்றும் தெரிந்து கொண்டான்.

ஒருநாள் பொழுது புலரும் முன் குகைக்கு அருகில் இருந்த நதியை நோக்கிச் சென்றான்.

அவன் எதிர்பார்த்தபடியே, யோகி நதியில் நீராடிக் கொண்டிருந்தார்.

நீராடி முடித்தபின், அவர் கரையேறி வருகையில், தனராஜ் ஓட்டமாக ஓடிச் சென்று அவர் கால்களில் வீழுந்து வணங்கி, "சுவாமி! உழைக்காமலே வாழ்க்கையில் வசதியாக இருக்க எனக்கு வரம் கொடுங்கள்!" என்றான்.

"உழைக்காமல் வாழக்கையில் மனிதனால் எதையும் சாதிக்க முடியாது.

ஆனால், நீராடியபின் முதலில் தென்படுபவனுக்கு நான் வரம் அளிப்பது வழக்கம். அதனால் உனக்கு ஒரு தாயத்துத் தருகிறேன். இதனுடைய உதவியினால் நீ வாழ்க்கையில் மேன்மையடைவாய்.



ஆனால், இதை ஒரு முறை மட்டுமே நீ பயன்படுத்த வேண்டும்" என்று சொல்லி விட்டு அகன்றார்

மிகவும் மகிழ்ந்த தனராஜ் தன் கிராமத்திற்குச் செல்ல விரும்பாமல், நகரத்தை நோக்கிப் புறப்பட்டான்.

நகரத்தின் தெருக்களில் அலைந்து கொண்டிருந்தபோது, தெருவில் தனது முன் சென்று கொண்டிருந்த இரு நண்பர்களின் உரையாடலை கேட்க நேரிட்டது.

"என்னப்பா வரதா? உனக்கு வியாபாரத்தில் ஒரு இலட்ச ரூபாய் லாபம் கிடைத்ததாமே! அத்தனை பணத்தையும் வீட்டில் வைத்துக் கொள்ளாதே! ஏற்கனவே, நகரத்தில் திருட்டு பயம் அதிகமாக உள்ளது" என்றான் அவர்களில் ஒருவன். அதற்கு வரதன், "கண்ணா! என் வீட்டைச் சுற்றி பலத்தடி காவல் போட்டிருக்கிறேன். காற்றுக்கூட என் வீட்டில் நுழைய முடியாது.

அதிருக்கட்டும்! உனக்கு மன்னரிடமிருந்து ஏராளமான பணம் வருமானமாகக் கிடைக்கிறது என்று கேள்விப்பட்டேன்.

அதனால் நீயும் எச்சரிக்கையாக இரு!" என்றான்.

அதற்கு கண்ணன் "எனக்குக் கிடைக்கும் வருமானத்தை எல்லாம் அட்சய நிதியாக மாற்றி விடுகிறேன்.

அதிலிருந்து எத்தனை எடுத்தாலும் வற்றாது. அதை யாராலும் திருட முடியாது என்றான்.

"அப்படியா? நீ இப்போது எங்கே வசிக்கிறாய்?" என்று வரதன் கேட்க, கண்ணன் தன் முகவரியைக் குறிப்பிட்டான்.. (தொடரும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

05.2015
05

- 1260 - மங்கோலியப் பேரரசின் மன்னனாக குப்ளாய் கான் முடிசூடினான்.
- 1762 - ரஷ்யாவும் புரூசியாவும் அமைதி உடன்பாட்டை எட்டின.
- 1916 - டொமினிக்கன் குடியரசை அமெரிக்க கடற்படையினர் கைப்பற்றினர்.
- 1925 - தென்னாபிரிக்காவில் ஆபிரிக்கன் மொழி அதிகாரபூர்வ மொழியானது.
- 1936 - எதியோப்பியாவின் அடிஸ் அபாபா நகரை இத்தாலியப் படைகள் கைப்பற்றின.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நாடு கடந்த நிலையல் நோர்வேயின் அரசு லண்டனில் அமைகப்பட்டது.
- 1941 - எதியோப்பியாவின் மன்னர் ஹைலி செலாசி அடிஸ் அபாபா திரும்பினார். இந்நாள் அங்கு விடுதலை நாளாகக் கொண்டாடப்படுகிறது.
- 1942 - பிரித்தானியப் படையினர் மடகஸ்காரைத் தாகினர்.
- **1944 - மகாத்மா காந்தி சிறையிலிருந்து விடுதலையானார்.**
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மன் படைகள் கனடா மற்றும் பிரித்தானியப் படைகளினால் நெதர்லாந்து, டென்மார்க் நாடுகளில் இருந்து விரட்டப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசிகளை எதிர்த்து பிராக் நகரில் கிளர்ச்சி ஆரம்பித்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஆஸ்திரியாவின் நாசிகளின் மோதோசென் வதை முகாம் விடுவிக்கப்பட்டது.
- 1950 - தாய்லாந்தின் ஒன்பதாவது ராமா மன்னராக பூமிபால் அடுள்யாடெ முடி சூடினார்.
- 1955 - மேற்கு ஜேர்மனி முழுமையான விடுதலை அடைந்தது.
- 1961 - மேர்க்குரி திட்டம்: அலன் ஷெப்பார்ட் விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது மனிதரும் முதலாவது அமெரிக்கரும் ஆனார்.
- 1976 - புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயருடனிருந்த இயக்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் மாற்றப்பட்டது.
- 1980 - ஆறு நாட்களாக தீவிரவாதிகளினால் முற்றுகையிடப்பட்டிருந்த லண்டனின் ஈரானியத் தூதரகத்தின் மீது வான்படையினர் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1981 - ஐரிஷ் புரட்சியாளர் பொபி சான்ட்ஸ் சிறையில் உண்ணாவிரதமிருந்து இறந்தார்.
- 1991 - ஈழத்துப் பெண் கவிஞர் சிவரமணி தனது 23 ஆம் வயதில் தற்கொலை செய்துகொண்டார்.
- 2006 - சூடான் அரசுக்கும் சூடான் விடுதலை இராணுவத்துக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

### பிறப்புகள்


- 1818 - கார்ல் மார்க்ஸ், ஜெர்மனிய மெய்யியலாளர் (இ. 1883)
- 1916 - ஜெயில் சிங், இந்தியாவின் 7ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1994)
- 1933 - இரத்னசிறி விக்கிரமநாயக்கா, இலங்கையின 11ஆவது, 14ஆவது பிரதம மந்திரி
- 1948 - பிச்சுமணி கைவல்யம், தமிழ்க் கவிஞர்
- 1964 - ஆறுமுகம் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர்

### இறப்புகள்

- 1821 - நெப்போலியன் பொனபார்ட், பிரெஞ்சு மன்னன் (பி. 1769)
- 1948 - புதுமைப்பித்தன், நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி (பி. 1906)
- 1957 - ஆர். மகாதேவன் (தேவன்), நகைச்சுவை எழுத்தாளர் (பி. 1913)
- 1981 - பொபி சான்ட்ஸ், ஐரிஷ் புரட்சியாளர் (பி. 1954)
- 1991 - சிவரமணி, ஈழத்துக் கவிஞை

### சிறப்பு நாள்

- சர்வதேச நாடுகள் மருத்துவச்சிகள் தினம் (International Midwives Day)



### மோகனதாஸ் கரம்சந்த் காந்தி

**மகாத்மா காந்தி** என்று அன்புடன் அழைகப்படும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி 1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி இந்திய நாட்டின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் எனும் ஊரில் பிறந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக தலைமையேற்று நடத்திய தன் காரணமாக இவர் **"விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை"** என்று அழைக்கப்படுகிறார். **சத்தியாக்கிரகம** என்றழைக்கப்பட்ட இவரது அறவழிப் போராட்டம் இந்தியநாட்டு விடுதலைக்கு வழி வகுத்ததுடன் ஏனைய சில நாட்டு விடுதலை இயக்கங்களுக்கும் ஒரு வழி காட்டியாக அமைந்தது. இவரது பிறந்தநாள் இந்தியாவில் **காந்தி ஜெயந்தி** என்று கொண்டாடப்படுகிறது.

இவரது 13 ஆவது வயதில் அக்கால வழக்கப்படி கஸ்தூரிபாய் என்ற பெண்ணை பெற்றோர் பால்ய விவாகம் செய்து வைத்தனர். இவர் பின்னர் தனது 18ஆம் வயதில் இங்கிலாந்து சென்று கல்விகற்று பரிஸ்டர் எனப் படும வழக்குரைஞர் பட்டம் பெற்றார்.

பகவத்கீதை, சமண சமய கொள்கைகள், லியோ டால்ஸ்டாயின் எழுத்துக்கள் போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட காந்தி, சத்தியம், அகிம்சை ஆகிய கொள்கைகளை தன் வாழ்நாள் முழுவதும் விடாமல் கடைப்பிடித்தார்.

வாரத்திற்கு ஒருநாள் மௌன விரதம் மேற்கொள்வார். காந்திக்கு **"மகாத்மா"** என்னும் பட்டம் அளித்தவர் **இரவீந்திரநாத் தாகூர்.**

காந்தி குஜராத்தி மொழியில் எழுதிய சுயசரிதை, **சத்திய சோதனை** என்ற பெயரில் தமிழ் மொழியிலும் An Autobiography: The Story of My Experiments with Truth என்ற பெயரில் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

1947 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி அன்று காந்தியைக் கொல்வதற்காக சதிமுயற்சி இடம்பெற்றது. ஆனாலும் அன்று அவர் உயிர் பிழைத்தார்.

காந்தி இறப்பதற்கு முந்திய தினம் வியாழக்கிழமை அவர் அணு ஆயுதங்களைப் பற்றி இந்திரா காந்தியிடம் கூறியது: "அணுகுண்டை ஒருங்கே அமெரிக்கா தவிர்க்க வேண்டும். அகிம்சா வழிப்போராட்டம் ஒன்றை மட்டும் அணுகுண்டுகளால் அழிக்க முடியாது! மற்றும் ஒரு சமயம் அகிம்சா இயக்கம் ஒன்றுதான் மனித இனத்தின் கைவசமுள்ள மாபெரும சக்தி பெற்ற ஓர் ஆயுதம். பேரழிவுச் சக்தியுடைய எந்த யுத்த ஆயுதத்தையும் விட பெரியது அது!" என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்த தடவை ஜனவரி 30 ஆம் திகதி மாலை ஆப்தே, **கோட்சே** இருவரும் கைத்துப்பாக்கியை மறைத்துக்கொண்டு, காந்தியின் பிராத்தனை மைதானத்தில் நடமாடிக்கொண்டிருந்தனர். அன்று கோட்சே வெற்றி அடைந்தான். காந்தியைக் கொன்ற சதிகாரனாய்ச் சரித்திரத்தில் இடம்பெற்றான். 1948 மே 27 ஆம் திகதி **நாதூரம் கோட்சே**, ஆப்தே இருவரும் கொலைக் குற்றம்சாட்டப்பட்டு நவம்பர் 15 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

...அப்போது ரஜினிகாந்த் வெளி நாட்டுக்குச் சென்றிருந்தார்.

நான் 'ஹலோ' என்றதும், மறுமுனை யிலிருந்து, "நான் ரஜினி பேசுகிறேன்' என்ற குரல் ஒலித்தது.

'எப்ப வெளிநாட்டிலிருந்து திரும்பினீர் கள்?' என்று நான் கேட்டதற்கு, 'நான் ஆஸ் திரேலியாவிலிருந்து பேசுகிறேன். நீங்கள் விநியோகஸ்தர்கள் சங்கத் தலைவராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டதாக அறிந்தேன். என்னுடைய வாழ்த்துக்கள்'என்றார், ரஜினி.

அவருடைய வாழ்த்துச் செய்தி எனக்கு நெகிழ்ச்சியை உண்டாக்கியது. என்னை தனது நண்பர் என்று மனதளவில் ஏற்றுக் கொண்டிருப்பதுடன், வெளிநாட்டுக்குச் சென்றிருக்கும்போதுகூட வாழ்த்துச் சொல் கிறாரே என்று எண்ணியபோது, அவர் அன்பையும், பண்பையும் எண்ணி மெய் சிலிர்த்துப்போனேன்' இவ்வாறு சிந்தாமணி முருகேசன் கூறினார்.

ரஜினி 'சுயதரிசனம்'

நான் நிறைய விஷயங்களை, சின்னக் குழந்தைங்ககிட்டே இருந்து கத்துக்கிட் டேன் கத்துக்கறேன். ஏன், பறவைகள், மிருகங்கள்கிட்டே இருந்துகூட கத்துக்க றேன்.

சில விடயங்களில், மனுஷனை விட மிருகங்கள் உயர்ந்து நிற்கின்றன. ஒரு மனிதன் இன்னொரு மனிதனைப் பார்த்துப் பொறாமைப்படுவான். ஆனால், மிருகங் கள் அப்படி இல்லே. ஒரு ஆடு, தான் புலியா மாறணும்னு புழுங்குதா? ஒரு மாடு, தான் யானையா மாறணும்னு நினைக்குதா?

- ரஜினிகாந்த்.

**ரஜினி எங்கே? டைரக்டர் பி.வாசு தவிப்பு!**

ஓட்டலில் ரூம் கிடைக்காததால் காரு க்குள் படுத்து தூங்கி னார்

படப்பிடிப்புக்காக சிக்மகளூர் சென்ற போது, ரஜினிக்கு ஓட் டலில் ரூம் கிடைக்க வில்லை! இதனால் காருக்குள் படுத்து தூங்கினார்!

இந்தத் தகவலை டைரக்டர் பி.வாசு வெளியிட்டார்.

பெரும் பிரச்சினை க்கு உள்ளான 'உழை ப்பாளி' படத்தை இயக்கியவர் பி.வாசு. அப்போது ஏற்பட்ட அனுபவங்கள் குறி த்து, அவர் கூறியதா வது:-

**ரஜினியால் கிடைத்த வாய்ப்பு**

'விஜயா - வாஹினி பட நிறுவனம் 20 வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் படமெ மடுக்க முன்வந்தபோது எடுத்த முதல் படம் தான் 'உழைப்பாளி.' படம் எடுப்பது தொடர் பாக அவர்கள் ரஜினி சாரிடம் பேசியபோது,




அவர்தான் 'பி.வாசு டைரக்ட் செய்யட்டும்' என்று சொல்லியிருக்கிறார். படத்தயாரிப்பு வேலைகள் மளமளவென தொடர்ந்தன.

இந்த சமயத்தில்தான் நடிகர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் இடையே பிரச் சினை ஏற்பட்டு, ரஜினி படத்தை வாங்கக் கூடாது என்று தடை போட்டு விட்டார்கள்.


அப்போது 'உழைப்பாளி' படத்துக்கு பூஜை போடப்போகிற நேரம். அடுத்து என்னாகுமோ என்ற அசாதாரணமான சூழ்நிலை நிலவியது.

**மறுபரிசீலனை**

ரஜினிசாரிடம் ஒரு வித்தியாசமான குணாதிசயம் உண்டு. தனது கருத்தில் மற்றவர்களுக்கு மாறுபாடு இருப்பதாகத் தெரிந்தால், தான் செய்தது சரிதானா என் பதை மறுபரிசீலனை செய்வார். விநியோக ஸ்தர்கள் முடிவு அறிவிக்கப்பட்டதற்கு மறுநாள் என்னிடம் போனில் பேசினார். 'நான் அந்தக் கூட்டத்தில் பேசியது சரியா, தப்பா? அவசரப்பட்டுட்டேனா?' என்றெல் லாம் கேட்டார்.

நமது வார்த்தைகள் மற்றவர்களுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படுத்திவிடக் கூடாது என்று ஏற்கனவே என்னிடம் படப் பிடிப்பு தளத்தில் சொல்லியிருக்கிறார். 'வாசு! ஒரு நாள் காலையில் தொடங்கி ராத்திரி நாம படுக்கைக்கு போகிற வரைக்கும் நம் மோட செயல்களால், யாருக்காவது பாதி ப்பு ஏற்பட்டிருக்குதான்னு யோசிச்சுப் பார்க்கணும்.

*(தொடரும்)*





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து – 132

....செம்பு நெறை யுதோ நெறையலயோ மூணு காம்பு எனக்கு; ஒரு காம்பு ஒங்கன்டுக்குன்னு ஒதுக்கி விட்டு எந்திரிச்சுருவா.

கண்ட அவுத்துவிடு கண்ணு அழகுசிங்கம்ன்னு சொல் லிட்டு அவ வேலயப் பாக்க அடுப்படிக்குப் போயிருவா. கொண்ணவாயன் அந்த நேரம் கூலம் புடுங்கப் போயி ருவான்.

ரெண்டு மாசமாச்சு... மூணு மாசமாச்சு. தோலு மாதிரி சுருங்கிக்கிட்டே போகுது கன்டுக்குட்டி. சாலு மாதிரி விரிஞ்சுக்கிட்டே வாரான் அழகுசிங்கம்.

என்னா ஏதுன்னு கடைசி யில கண்டுபுடிச்சா.... கன்டுக் குட்டியக் கொலபட்னியாப் போட்டுப்புட்டு, உள்ள தலையச் செலுத்தி ஒத்தக் காம்புப்பால இவனா உறுஞ் சுக் குடிச்சிருக்கானய்யா இத் தன நாளா.

ஏண்ட நீ கருவாச்சிக்குப் பொறந்தியா காராம் பசுவுக் குப் பொறந்தியான்னு அவ னப் பாவப்பட்ட ஒரு பார்வை பாக்குது கன் னுக்குட்டி.

எப்பிடிடா மகனே பசுமாட் டுக் கவுட்டுக்குள்ள பயப் படாமப் பாலு குடிக்கிற வித்த படிச்ச?

விரல் தடம் பதிய அடிச்சிருக்க வேண்டிய காரியத்துக்கு கன்னத்துல உதடு பதிய முத்தம் குடு த்து உச்சி குளுந்து போனா கருவாச்சி.

தப்ப மெச்சிக்கிட்டே யிருந்தா அதுவே தர்ம மாயிருதா இல்லையா? அந்தக் கணக்காகிப் போச்சு அழகுசிங்கம் கத.

முந்தானையில முடி ஞ்சுவச்ச காச ஆத்தா அவுக்கிற வரைக்கு பொறுமையில்ல; அறுத் துப்புடறான் அறுத்து. அடுப்புல கூட்டி வச்ச கறி வேகிற வரைக்கும் பொறுமையில்ல; அகப் பைய அளாவி அரிச்சுப் புடறான் அரிச்சு.

ஒடை ச்ச தேங்காயி சில்லெடு க்கிற வரைக் கும் பொறுமையில்ல; சிரட் டையோட சேத்துக் கடிச்சுப் புடறான் கடிச்சு.

வீட்ல வளக்குற புலி பம்முறதும் பாயறதும் செல் லச்சேட்டை பண்றதும் குட்டியா இருக்கிறப்ப கொண்டாட் டமாத்தான் இருக்கும். மீசை யும் நகமும் வளந்திருச்சுன்னா அப்பறம் அதப் பாயில போட் டுப் பக்கத்துலயா போயிப் படுக்கமுடியும்?



கருவாச்சி ஒண்ணு நெனை க்கக் காலம் என்னமோ நெனைக்குது.

விளையும் பயிர் மட் டுமா- களையுந்தான் தெரி ஞ்சு போகும் மொளை யிலயே.

அடே அழகுசிங்கம்! வாடா இப்படி.... அனா எழுதச் சொல்லித்தர்றேன் வாஞ்சையாத்தான் கூப்பிட் டாரு வாத்தியாரு.

வேப்பமரத்து நெழலு; வெள்ள மணலு. ஆனாலும் ஆணி மேல உக்காந்தவன் மாதிரிதான் உக்காந்தான் அழகுசிங்கம்.

நல்லாப் பாத்துக்க உள் ளங்கையில மெழுகி மண லச் சமம் பண்ணி நிதானமா அன்னு எழுத்துனாரு; எழுதி எழுதி அழிச்சாரு. அழிச்சு அழிச்சு எழுதுனாரு.

கடைசியா எழுதுனத அழிச்சாரு; இப்ப நீயே உன்கையால அனா எழுதி அந்த எழுத்து மேல இத அடுக்குடான்னு புளிய வெதை கள அள்ளிப் போட்டாரு.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேபாள நிலநடுக்கத்தால்

# உயிரிழப்பு அதிகரிப்பு



## 7250 பேரின் சடலங்கள் மீட்பு

(காத்மண்டு)

**நேபாளத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தினால் அந்நாடு சீர்குலைந்த அதேவேளை இதுவரை 7 ஆயிரத்து 250 பேரின் சடலங்களை அந்நாட்டு மீட்புப்படையினர் மீட்டுள்ளனர் எனவும் தொடர்ந்து மீட்புப்பணிகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேபாள நாட்டில் கடந்த 25 ஆம் திகதி 7.9 ரிக்டர் அளவுக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் பல ஆயிரக்கணக்கான வீடுகள், கட்டடங்கள் இடிந்து தரைமட்டமானது. நேபாளத்தின் மலைப்பகுதிகள் ஏறக்குறைய முற்றிலும் அழிந்துவிட்டது. நிவாரண பணிகளில் பல்வேறு நாடுகளில் இருந்து வந்துள்ள மனிதநேய அமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன.

வீடுகளை இழந்தவர்கள் கூடாரங்களிலும், வாகனங்களிலும், திறந்தவெளிகளிலும் தங்கியுள்ளனர். பலர் மீண்டும் நிலநடுக்கம் ஏற்படுமோ என்ற பீதியில் தங்கள் வீடுகளுக்கு திரும்ப விருப்பம் இன்றி உள்ளனர்.

திறந்தவெளியிலும், கூடாரங்களிலும் தங்குவதிலும் நோய் தாக்கும் அபாயம் இருப்பதாக அஞ்சப்படுகிறது. சிந்துபால்சவுக் மாவட்டத்தில் உள்ள 90 சதவீத வீடுகள் அழிந்துவிட்டன. அந்த பகுதியில் மக்கள் தங்கள் கைகளாலேயே குடும்ப உறுப்பினர்கள் யாராவது உயிருடன் இருப்பார்களா? என்று தோண்டிப் பார்க்கிறார்கள். சிந்து பால்சவுக்கில் மட்டும் 40 ஆயிரம் வீடுகள் அழிந்துவிட்டதாக நிவா ரண பணிகளில் ஈடுபட்ட சர்வதேச செஞ்சிலுவை சங்கம் கூறியுள்ளது. தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

இடிபாடுகளில் சிக்கி பலியானவர்கள் எண்ணிக்கை 7 ஆயிரத்து 250 ஐ தாண்டியது. இதுதவிர 14 ஆயிரத்து 267 பேர் காயம் அடைந்துள்ளனர். இதற்கிடையே 4.3 ரிக்டர் அளவுகொண்ட நிலஅதிர்வு அங்கு மீண்டும் ஏற்பட்டது பீதியை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# நீரிழிவு நோய் நிவாரணமும் உணவு முறையும்

## நீரிழிவு நோயை கட்டுப்படுத்தலாம்

Health Care

மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

ஆனால் இப்போது அப்படியில்லை. இன்சுலின் போட்டுக் கொண்ட உடனேயே கூட சாப்பிடலாம். அந்த மாதிரியான இன்சுலின் எல்லாம் தற்போது வந்துவிட்டன. உடல் நிலைக்குத் தகுந்த மாதிரி ஒருவருக்கு இன்சுலின் போட வேண்டும். முதல்வகை நீரிழிவு நோய் உள்ள நோயாளிகளுக்கு தினமும் 3 முறை இன்சுலின் போட வேண்டிவரும்.

2 ஆவது வகை நோய் உள்ளவர்களுக்கு ஒருவேளை அல்லது 2 வேளை போட வேண்டியதிருக்கும். அவர்கள் உடல் தன்மைக்கு ஏற்ப இது மாறுபடும்.

### பரிசோதனை

இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாகும் போதுதான் நீரிழிவு நோய் வருகிறது. இரத்தத்தில் உள்ள அதிக அளவு சீனி சிறுநீரகத்திலும் கலந்து விடுகிறது. சீனி அளவு எந்தளவுக்கு இருக்கிறது என்பதை இரத்தப் பரிசோதனை மூலம் அறிந்து கொள்ளலாம். சிறுநீர் பரிசோதனையில் சீனியின் அளவு எவ்வளவுதான் அதிகம் இருந்தாலும் அது நீரிழிவுநோயின் கீழ்வராது. ஆகவே பிளட் சுகர், யூரின் சுகர் என்று தனித்தனியாக கிடையாது. இரண்டும் ஒன்றுதான் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இரத்தத்தில்180 மில்லி கிராமுக்கு மேல் சீனியின் அளவு இருக்குமானால் அது சிறுநீரில் கலந்து விடும். இரத்தத்தில் சீனியின் அளவு சரியாக இருக்கும் போது சிறுநீரில் சீனி வரலாம். அப்படி வந்தால் நீரிழிவு நோய் கிடையாது. பயப்பட வேண்டியதில்லை.

### தீவிர கவனம்.

நீரிழிவு நோய்க்கு ஆளானவர்கள் காலிலோ அல்லது உடல் அவயவங்களிலோ காயங்கள் ஏற்படாமல்பார்த்துக்கொள்ளவேண்டும். மீறி காயம் பட்டு புண்ணாகி விட்டால் அதைக் குணப்படுத்த தீவிர கவனம் செலுத்தவேண்டும். காரணம் உடலில் காயம் ஏற்படும் போது அது புண்ணாகிப் புரையோடிப் போகும் வாய்ப்புகள் அதிகம்.

ஒருவருக்கு சீனியின் அளவு 150 மில்லிகிராம் இருந்தது என்றால் அவருக்குக் காயம்பட்ட இடத்தில் புண் ஏற்படும்போது சீனி யின் அளவு 350 மில்லி கிராமாக உயர்ந்து விடும்.குறையாது. இதனால்புண் ஆறாமல் போவதுடன் காயம்பட்ட இடம் புரையோடிப் போகும். அந்த இடத்தை வெட்டி எடுத்தால் தான் புண் ஆறும் என்ற நிலை ஏற்பட்டு விடும்.

ஆனால் ஒருவர் கட்டுப்பாடோடு இருந்தால் அந்த அளவுக்குப் போகாது நீரிழிவுநோய்வந்துவிட்டாலே கையை எடுத்துவிடுவார்கள். கால்களை வெட்டி விடுவார்கள் என்று பாதிக்கப்பட்டவர்கள் மற்றவர்கள் மனதில் அச்சத்தை விதைத்து விடுவதுண்டு. அதில் முழு அளவு உண்மை இருப்பதில்லை. காரணம் அவர்கள் செய்யும் தவறுகளை மூடி மறைத்துவிடுவார்கள். அல்லது கட்டுப்பாடு இல்லாமல் தள்ளப்பட்டு இருப்பார்கள். இதையெல்லாம் அவர்கள் வெளியில் சொல்வதில்லை. மாறாக பயமுறுத்தி விடுவார்கள்.

### எளிய வழிகள்

நீரிழிவு நோய் இருக்கிறதே வாழ்க்கையே போய்விட்டதே என்று யாரும் அச்சப்படவேண்டியதில்லை. உணவுக்கட்டுப்பாடு, எளிதான உடற்பயிற்சி இருந்தால் போதும் நீரிழிவு நோயை இனிதாகவே வெல்லலாம்.




முன்பெல்லாம் நீரிழிவு நோய் உள்ளவர்களை பெரும்பாலும் பட்டினிபோட்டு விடுவார்கள். அல்லது சோறுக்குப் பதிலாக கோதுமை ரொட்டி, சப்பாத்தி என்று கொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள். இப்போது இதற்கெல்லாம் அவசியமில்லை. நீரிழிவு நோய் இருந்தாலும் வழக்கமாக நாம் விரும்பிச் சாப்பிடும் உணவையே சாப்பிடலாம். அதற்கான மாத்திரைகளும் வந்துவிட்டன. ஒரு சிலரை அவர்கள் வாழ்க்கைத்தரத்தில் இருந்து சற்று கீழே இறங்கவைத்தால் மன அழுத்தத்திற்கு ஆளாகி விடுவார்கள். வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது போல் ஆகிவிடுவார்கள்.

### உணவுப் பழக்கம்

ஆகவே அவர்கள் மனநிலையும் பாதிக்கப்படாமல் அவர்கள் வாழ்க்கை நிலையிலும் மாற்றம் இல்லாமல் உணவுப் பழக்கத்திலும் பெரிய மாற்றங்கள் இல்லாமல் சிறுசிறு மாற்றங்கள் மூலம் சீனியின் அளவை அவர்களிடம் கட்டுப்படுத்தலாம்.

அரிசி உணவு விரைவாக ஜீரணம் ஆகிவிடும். ஆனால் கோதுமை அப்படியில்லை. ஜீரணமாக நீண்ட நேரம் ஆகிவிடும். கோதுமை உணவு மூலம் சீனியின் அளவு அதிகரிப்பது தடுக்கப்படுகிறது. எனவேதான் கோதுமை உணவு வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. காய்கறிகளில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. உணவில் காய்கறிகளை அதிகம் சேர்த்துக் கொள்வதன் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளலாம். ஆனால் இனிப்பை சுத்தமாக ஒதுக்கிவிட வேண்டும். அதுமட்டும் முக்கியம். உணவை மிக அதிகமாகவும் சாப்பிடக் கூடாது. மிகக் குறைவாகவும் சாப்பிடக் கூடாது. மிதமான உணவு உடம்புக்கு நல்லது. தகுந்த உணவு வகைகளை தேர்ந்தெடுத்துச் சாப்பிடும்போது உடம்புக்கு எந்தப் பிரச்சினையும் வராது. மன உளைச்சலும் இருக்காது.

### பயிற்சிகள்

தினமும் காலையில் எழுந்ததும் 30 நிமிட நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இதனால் உடலில் இருக்கும் தேவைக்கு அதிகமான கொழுப்புச்சத்து கரைகிறது. நடைப்பயிற்சி என்றதும் பூங்காக்களைத் தேடி ஓடவேண்டியதில்லை. வீதியோரம் தான் நடக்கவேண்டும் என்பதில்லை. வீட்டுக்குள் சற்று விசாலமான அறை இருந்தாலும் போதும். வீட்டிற்குள்ளேயே நடைப்பயிற்சி செய்ய முடியாதவர்கள் மாலையில் நடக்கலாம். இதுவும் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. வாரத்தில் 5 நாட்கள் இந்தப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

வைத்தியரிடம் சென்று உடற் பரிசோதனை செய்து கொண்டு சீனியின் அளவு அதன் தன்மைக்கு ஏற்ப மருந்து மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடலாம். சீனியின் அளவு வீரியமாக இருக்கும்போது இன்சுலின் போட்டுக்கொண்டால் தான் தீர்வு என்றால் நிச்சயம் இன்சுலின் ஊசி போட்டுத்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை.

இன்சுலின்போடும் அளவுக்கு உடல் வந்துவிட்டதே என்று மன உளைச்சலுக்கு ஆளாகத் தேவையில்லை.

ஒருவருக்கு ஒருமுறை நீரிழிவு நோய் வந்துவிட்டதென்றால் அது உடலோடு ஒட்டியிருக்கின்ற சதை மாதிரி. கடைசி வரை கூடவே இருக்கும். ஆனால் உணவுக் கட்டுப்பாட்டுடன் இருந்தால் நீரிழிவு நோய் நம்மை ஒன்றும் செய்யாது.

### நீரிழிவு நோயைக் கண்டறிதல்

இந்த நோய் குளுக்கோஸ் டாலரன்ஸ் பரிசோதனை (GTT) மூலமாக உறுதி செய்யமுடியும். இந்தப் பரிசோதனை செய்வதற்கு முதலில் வெறும் வயிற்றில் இரத்தத்தில் சீனியின் அளவைப் பரிசோதனை செய்யவேண்டும்.பின் 75 கிராம் குளுக்கோஸ் அருந்தி ஒரு மணி நேரம் கழித்தும் இரண்டு மணி நேரம் கழித்தும் இரத்தத்தில் சீனி அளவைப் பரிசோதனை செய்யவேண்டும்.நீரிழிவு நோய் வருவதற்கு வாய்ப்பு உள்ளவர்கள் (GTT) வருடம் ஒருமுறையாவது செய்துகொள்வது நல்லது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பெரும் திருடர் ஐக்கிய தேசிய கட்சியில்

## முன்னாள் அமைச்சர் தகவல்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியிலேயே நாட்டின் பெரும் திருடர் இருக்கின்றார் என முன்னாள் அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களை திருடர்கள் என சிலர் குற்றம் சுமத்தி வருகின்றனர். எனினும் நாட்டின் பெரிய திருடர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கின்றார். அவர் பற்றிய விபரங்கள் வெகு விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.**



நான் சிறந்த சுதந்திரக் கட்சி உறுப்பினர். 33 ஆண்டுகளுக்கு முன்னதாக சிறிமா பண்டாரநாயக்கவிடம் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டேன்.

எந்த சந்தர்ப்பத்திலும் கட்சியை விட்டு விலகிச் சென்றதில்லை.

சந்திரிகா, அநுர பண்டாரநாயக்க, மைத்திரி கட்சியை விட்டுச் சென்ற போதிலும் நாம் செல்லவில்லை. எனவே கட்சியைப் பற்றி பேசும் உரிமை எமக்கு உண்டு.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இன்று மகிந்த ராஜபக்ஷவையே ஆதரிக்கின்றனர். மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிக்க வேண்டும்என்பதே எமது கோரிக்கை என அண்மையில் களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# விபத்துக்குள்ளான இளைஞன் காயம்

(கரணவாய்)

கூலர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இவ்விபத்தில் சாரையடி புலோலியைச் சேர்ந்த உதயகுமார் தனேஸ் (வயது-19) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கடும் காயங்களுக்கு உள்ளான பிரஸ்தாப இளைஞர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3-60)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 40 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 60 | 60 | 40 | 40 |
| தக்காளி | 80 | 100 | 50 | 120 | 80-100 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 | 50 | 40 |
| கோவா | 30 | 30 | — | 60 | 40 | 40 |
| கரட் | 120 | 120 | 110 | 200 | 100-120 | 100 |
| பூசணி | 20 | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 50 | 60 | 70 | 70 |
| வாழைக்காய் | 30 | 50 | 60 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 70 | 120 | 50-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 110 | 100 | 100 | 120 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 80 | 90 | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 50 | 60 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | — | 80 | 60 | 80 | 90 | 70 |
| பயற்றங்காய் | 160 | 120 | 80 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 160 | 140 | 120 | 200 | 140 | 180 |
| பீற்றூட் | 60 | 50 | 80 | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 120 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 350 | — | 600 | 400-500 | 500 |
| போஞ்சி | — | 120 | 110 | 200 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | 30 | 80 | — | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 250 | 160 | 80 | 200 | 170 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 200 | 100 | — | 120 | 120 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 80 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 25 | 20 | 10 | 20 |

# பேராசிரியர்கள் மீதான தாக்குதல்களுக்கு கண்டனம்

(கொழும்பு)

பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி மற்றும் மேலும் ஒரு பேராசிரியரும் தாக்கப்பட்டமை தொடர்பில், பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஒன்றியத்தின் தலைவர் பிரபாத் ஜயசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் நிலவிய அரசியல் கலாசாரத்தை நினைவூட்டும் வகையில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த தாக்குதல் சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி கிருளப்பனையில் இடம்பெற்ற மேதின நிகழ்வொன்றின் போது, பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 361

சுஜே செல்வா




கிரிஸ் கிரி




சிந்து சிந்துஜா




லங்கா பாய் வாமன்




கஜன் கஜமுகன்




கண்ணன் ராதாரவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊழல் வழக்கின் தீர்ப்பு கடுமையாக இருக்க வேண்டும்!

பவானி சிங் நியமனத்தை எதிர்த்து, அன்பழகன் நடத்திய சட்டப்போரில் ஜெயலலிதா தரப்பு பின்னடைவைச் சந்தித்துள்ளது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, ஆர்.கே.அகர்வால், பரபுல்ல சி.பந்த் அடங்கிய மூன்று நீதிபதிகள் அமர்வு, கடந்த 27 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது. அதில், அன்பழகனின் கோரிக்கை நியாயமானது, ஜெயலலிதா சொத்துக குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு விசாரணையில் பவானி சிங்கை அரசு வழக்கறிஞராக நியமித்தது செல்லாது, அதைச் செய்ய தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை, இந்த வழக்கில் அன்பழகனின் வாதத்தையும் கர்நாடக உயர் நீதிமன்றம் கேட்க வேண்டும் என்று ஆணித்தரமாக உத்தரவிட்டது. அதன்மூலம், ஜெயலலிதாவுக்கு எதிரான அஸ்திரங்கள் மேலும் கூர்மைப்பட்டுள்ளன என்றே சொல்லலாம். இந்தத் தீர்ப்பில் பல்வேறு ஆணித்தரமான வாதங்கள் உள்ளன. அதன் முழுமையான விபரம் இது:

### பதற்றமும் அச்சமும்!

ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டில் பவானி சிங்கை அரசு வழக்கறிஞராக தமிழக அரசு நியமனம் செய்தது செல்லாது என்று க.அன்பழகன் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

அதை விசாரித்துத் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மதன் லோகூர், பானுமதி ஆகியோரில் ஒருவர் பவானி சிங் நியமனம் செல்லும் என்றும் இன்னொருவர் செல்லாது என்றும் தீர்ப்பளித்துள்ளனர்.

பவானி சிங் நியமனம் செல்லும் என்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதிபதி மதன் லோகூர், ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தமிழ்நாடு அரசு வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பை மேற்கோள்காட்டி உள்ளார். அந்தத் தீர்ப்புப் படி, ஒரு மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்துக்கு வழக்கு மாற்றப்பட்டுவிட்டால், வழக்கை மாற்றிக் கொடுத்த மாநிலம் நீண்ட காலத்துக்கு அதில தலையிட முடியாது. வழக்கைப் பெற்றுக் கொண்ட மாநிலம்தான் அந்த வழக்குக்கு முழுப் பொறுப்பு. அரசு வழக்கறிஞர், உதவி வழக்கறிஞர் நியமனம் மற்றும் அவர்களின் ஊதியம் தொடர்பாக வழக்கைப் பெற்றுக்கொண்ட மாநிலம் தான் முடிவெடுக்க அதிகாரம் படைத்தது என்று குறிப்பிட்டு பவானி சிங் நிய மனம் செல்லாது என்று அறிவித்துள்ளார்.

ஆனால், மற்றொரு உச்ச நீதிமன்ற நீதிபதி பானுமதி, நீதிபதி மதன் லோகூரின் தீர்ப்பை முழுமையாக ஏற்றுக்கொண்டாலும், சி.ஆர்.பி.சி., 301 (1) அரசு வழக்கறிஞருக்கு வழங்கும் சிறப்பு அதிகாரத்தின்படி பவானி சிங் நியமனம் செல்லும் எனறு குறிப்பிட்டுள்ளார். சி.ஆர்.பி.சி 301 (1) சொல்வதன்படி, கீழ் நீதிமன்றத்தில் ஒரு வழக்குக்கு ஆஜரான அரசு வழக்கறிஞர், அந்த வழக்கின் இன்சார்ஜ் என்ற முறையில், மேல் நீதிமன்றத்திலும் அவரே அரசு வழக்கறிஞராகத் தொடரலாம். அதற்கு எழுத்துப்பூர்வமான உத்தரவு எதுவும் தேவையில்லை என்று குறிப்பிட்டு பவானி சிங்கின் நியமனத்தைச் செல்லும் என்று அறிவித்துள்ளார்.

இந்த விவகாரத்துக்குள் போய் எங்களின் தீர்ப்பைச் சொல்வதற்கு முன்பு, நாங்கள் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இந்த வழக்கில் தமிழக அரசு, "தேவையற்ற பாரங்களைத் தன் தலையில் ஏற்றிக்கொண்டு செயற்பட்டுள்ளது. எதிர்காலம் பற்றிய அச்சத்தில் தமிழக அரசு செயற்பட்டுள்ளது. பதற்றமும் அச்சமும் நஞ்சைப் போன்றது" என்பதை தமிழக அரசு மறந்துவிட்டது.

### கர்நாடக அரசுக்குத்தான் அதிகாரம்!

சட்டப்பிரிவுகள் 24, 25, 25-A, 301 (1) ஆகிய பிரிவுகளை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம், அரசு வழக்கறிஞர் நியமனம், அதற்கான அதிகாரம், கட்டுப்பாடுகள், விதிமுறைகள், சட்ட எல்லைகள் போன்றவற்றைத் தெளிவாக உணர முடியும். அப்படி உணர்ந்து கொள்வதன் மூலம் பொருந்தாத முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்கலாம். பிரிவு 2 (ர) சி.ஆர்.பி.சி என்பது பொதுவாக அரசு வழக்கறிஞர் நியமனம் பற்றிச் சொல்கிறது. ஆனால், அதில் பிரிவு 24 மற்றும் அதன் துணைப் பிரிவுகள் அதைப் பற்றித் தெளிவாக விவரிக்கிறது.

1. சி.ஆர்.பி.சி 24 இன்படி யாரை வேண்டுமானாலும் அரசு வழக்கறிஞராக நியமிக்கலாம்.

2. சி.ஆர்.பி.சி 24 (1) இன்படி, எந்த உயர் நீதிமன்றத்துக்கும் மாநில அரசு அல்லது மத்திய அரசு உயர் நீதிமன்ற நீதிபதியோடு கலந்தாலோசித்து அரசு வழக்கறிஞரை நியமனம் செய்யலாம்.

3. சி.ஆர்.பி.சி.24 (3) இன்படி, எந்த மாவட்டத்துக்கும் அரசு வழக்கறிஞரை மாநில அரசு நியமிக்கலாம்.

4. சி.ஆர்.பி.சி.24 (8) இன்படி, மத்திய அரசு 10 வருடங்களுக்கு மேலாக வழக்கறிஞராகப் பயிற்சி பெறும் ஒருவரை சிறப்பு அரசு வழக்கறிஞராக நியமிக்கலாம்.

அதுபோல, சட்டப்பிரிவு 25 இல் சட்ட இயக்குநரகம் அரசு வழக்கறிஞர் நியமனத்தில் பின்பற்ற வேண்டிய தெளிவான வழிமுறைகளை விளக்கிச் சொல்லி உள்ளது. 24 மற்றும் 25A அரசு வழக்கறிஞர் நியமனத்தில் பின்பற்ற வேண்டிய கட்டுப்பாடுகளை வரையறுக்கிறது. 24 (1) உயர் நீதிமன்றத்துக்கு அரசு வழக்கறிஞர் நியமனம் பற்றி விளக்குகிறது. 24 இல் பிரிவு 3 மாவட்டங்களுக்கு அரசு வழக்கறிஞர்களை நியமிப்பதை எடுத்துச் சொல்கிறது. நீதிபதி பானுமதி சொல்லி உள்ள பிரிவு சி.ஆர்.பி.சி- 301 அத்தியாயம் 24 பொதுவான விசாரணைகள் மற்றும் வழக்காடும் முறைகளைப் பற்றி விளக்கக்கூடியது. ஆனால், இதன் உள்பிரிவுகளை நன்றாக ஆராயும்போது, ஒரு வழக்கில் கீழ் நீதிமன்றத்திலோ அல்லது சிறப்பு நீதிமன்றத்திலோ ஆஜரான வழக்கறிஞர், அதே சட்ட எல்லைக்குட்பட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீட்டுக்குச் செல்லும்போது அவர் யாருடைய உத்தரவும் இன்றி, அந்த வழக்கின் இன்சார்ஜ் என்ற முறையில் அதில் ஆஜராகலாம்.

ஆனால், சிறப்பு நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றம் அல்லது அந்த சட்ட எல்லையைத் தாண்டி மேல் முறையீட்டுக்குச் செல்லும்போது அதில் அவர் அரசு வழக்கறிஞராக ஆஜராக முடியாது. அதன்படி பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் ஆஜரான பவானி சிங், அந்த உரிமையோடு கர்நாடக உயர் நீதிமன்றத்திலும் அரசு வழக்கறிஞராக ஆஜராக முடியாது. மேலும், அரசு வழக்கறிஞரை நியமிக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கும் கிடையாது. அந்த அதிகாரம் கர்நாடக அரசுக்கே உண்டு.

### ஊழல் வழக்கின் தீர்ப்பு கடுமையாக இருக்க வேண்டும்!

அதே நேரத்தில் புதிதாக நியமிககப்படும் அரசு வழக்கறிஞர்மூலம் முதலில் இருந்து மறு விசாரணை நடத்தத் தேவையில்லை. அவர் தன்னுடைய வாதத்தை எழுத்துப்பூர்வமாக 50 பக்கங்களில் கொடுத்தால் மட்டும் போதும். இது ஊழல் வழக்கு. அண்மைக் காலங்களில் ஊழல் வழக்குகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் கடுமையான தீர்ப்புகளை வழங்கி வருகிறது. உதாரணத்துக்கு, 'நிரஞ்சன் ஹேமச்சந்திரா சசிட்டால் ஸ்டேட் ஆஃப் மகராஷ்டிரா' வழக்கில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், "ஊழல் என்பது நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கும். முன்னேற்றத்தை முடக்கும். நாம் அடைய வேண்டிய லட்சியத்தின் வேகத்தை மட்டுப்படுத்தும். மக்களின ஆரோக்கியத்தைப் பாதிக்கும். அரசியல் சாசனத்தின் நேர்மையைச் சீரழிக்கும். எனவே, ஊழல் வழக்குகளில் தீர்ப்பளிக்கும்போது, நீதிபதி உறுதியான மனப்பான்மையோடு தீர்ப்பளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டதைச் சொல்லலாம்.

'சுப்பிரமணிய சுவாமி Vs சி.பி.ஐ.' வழக்கில், உயர்ந்த பொறுப்பில் இருக்கும் பொது ஊழியர்கள் ஊழலில் ஈடுபடும்போது, அது சமூக முன்னேற்றத்தைக் கீழ் நோக்கி இழுக்கும் இயந்திரமாகச் செயற்படுகிறது. எனவே, ஊழல் வழக்குகளில் தீர்ப்பளிக்கும்போது, அது கடுமையானதாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டதையும் உதாரணமாகச் சொல்லலாம்.

### அன்பழகன் மனுவை பரிசீலிக்க வேண்டும்!


எனவே, ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பளிக்கப் போகும் கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி, இவற்றைக் கருத்தில் கொண்டு தீர்ப்பளிக்க வேண்டும். ஒவ்வோர் ஆவணத்தையும் ஒவ்வொரு சாட்சியின் வாக்குமூலத்தையும் பாரபட்சமின்றி பரிசீலித்துப் பார்க்க வேண்டும். ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கு, சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, அன்பழகன் 400 பக்கங்களுக்கு தன்னுடைய வாதத்தை எழுத்துப் பூர்வமாகக் கொடுத்துள்ளார். ஆனால், மேல்முறையீட்டில் அவருக்கு அந்த வாய்ப்பை கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி அளிக்கவில்லை. எனவே, தற்போது அவருக்கு அந்த வாய்ப்பை நாங்கள் அளிக்கிறோம். க.அன்பழகனின் தன்னுடைய வாதத்தை 90 பக்கங்களில் எழுத்துப்பூர்வமாக அளிக்கலாம். அதை கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி பரிசீலிக்க வேண்டும்.

### நீதிபதிக்கு தீர்ப்பே ஆன்ம பரிசோதனை!

கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி இந்த வழக்கில் தீர்ப்பளிக்கும் போது, அச்சமோ, பதற்றமோ கொள்ளக் கூடாது. சரியான பார்வை, சிறப்பான நிர்வாகத்திறனுடன் ஆவணங்களையும் சாட்சிகளையும் பரிசீலித்து தீர்ப்பளிக்க வேண்டும். ஒரு நீதிபதி அளிக்கும் தீர்ப்புதான் அவருக்கான ஆன்ம பரிசோதனை. மனுதாரரர் ஒத்துழைக்கவில்லை, அரசாங்கம் ஒத்துழைக்கவில்லை என்பதால், நீதிபதி தன்னுடைய கடமையில் இருந்து தவறக் கூடாது. பலவீனத்தையும் தடுமாற்றத்தையும் தவிர்க்க வேண்டும்." இவ்வாறு தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

குமாரசாமியின் தீர்ப்பு எப்படி இருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கோடு போட்டுக் காட்டியுள்ளது.

-யூனியர் விகடன்-



பிரபுல்ல சி.பந்த்



தீபக் மிஸ்ரா



ஆர்.கே.அகர்வால்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசியக்கொடி திரிபுபடுத்தப்பட்டமை குறித்து புலனாய்வுப் பிரிவு விசாரணையை நடத்தும்

இலங்கையின் தேசியக்கொடி திரிபுபடுத்தப்பட்டமை குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரினால் இவ்வாறு புலனாய்வுப் பிரிவிடம் விசாரணை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு எதிரில் நடைபெற்ற போராட்டமொன்றின் போதும், கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றின் போதும் சிறுபான்மை சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை உதாசீனம் செய்யும் வகையிலான திரிபுபடுத்தப்பட்ட தேசியக் கொடி பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பந்துல குணவர்தன, டலஸ் அழகப்பெரும, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில போன்றவர்களும் இந்த கொடியை ஏந்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தக்கூடாது எனக் கோரி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இவ்வாறு சிறுபான்மை இன சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்யும் நிறங்களை உள்ளடக்காது தேசியக்கொடியை பயன்படுத்தியமை அரசியல் அமைப்பிற்கு முரணானது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


இது தொடர்பில் மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி, பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

சட்டத்தரணிகள், பொது அமைப்புக்கள், கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகளை செய்துள்ளனர். இந்த முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது இந்த விசாரணைகள் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-5)

# பொதுத்தேர்தலுக்கு முன்னர் விமல் வீரவன்ச கைதாவார்?

## சந்திரிகா நடவடிக்கை



**(கொழும்பு)**

**பொதுத்தேர்தலுக்கு முன்னர் விமல் வீரவன்சவை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, பொலிஸ் நிதி குற்றத்தடுப்பு பிரிவுத் தலைவர் ரவி வைத்தியலங்காரவிற்கு உத்தரவிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

வீடமைப்பு, பொறியியல் சேவைகள் மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் அமைக்கப்பட்ட "ஓஷன் வீவ் டெவலொப்பர்ஸ்" நிறுவனத்தின் மூலம் கடந்த காலங்களில் இடம்பெற்ற நிதி மோசடிக்கு எதிராக விமல் வீரவன்ச கைது செய்யப்படவுள்ளார்.

அந்நிறுவனத்தினால் மத்தேகொட மற்றும் கஹாதுடுவ பிரதேசத்தில் வீடமைப்பு திட்டத்தின் ஊடாக 71 மில்லியன் பெறுமதியான 6 வீடுகளை கையளிக்கும் போது நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் நிதி குற்றத்தடுப்பு பிரிவு கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி கொழும்பு நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பித்துள்ளது.

அரசாங்கத்திற்கு கிடைக்கவிருந்த வருமான இழப்பு மற்றும் பணமோசடி சட்டத்தின் கீழ் பொலிஸ் நிதி குற்றத்தடுப்பு பிரிவு தற்போது வரை விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (இ-5)

## தில்ருக்ஷிக்கு எதிராக 12 குற்றச்சாட்டுக்கள்

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு எதிராக 12 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை யொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 105 பாராளுமன்ற உறுப்பினர்களே இத்தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு பணிப்பாளர் நாட்டின் அரசியலமைப்பிற்கு முரணான வகையில் செயற்பட்டுள்ளார் என தெரிவித்தே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

அதாவது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டமை அரசியலமைப்பிற்கு முரணானது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்லாது பணிப்பாளர் நாயகத்தின் பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் குற்றம் சுமத்தி இத்தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# சுதந்திரக் கட்சியின் தலைமையில் மீண்டும் அரசாங்கம் உதயமாகும்

## சுசில் பிரேமஜயந்த

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பலத்துடன் அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுக்கொண்டு மீண்டும் சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆதரவுடன் இதனை மேற்கொள்ளப்போவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு ஹைபார்க் மைதானத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதியின் செய்தியை வாசித்த பின் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-5)

# சோமவன்சவுடன் இணக்கத்தினை ஏற்படுத்தும் முயற்சியில் ஜே.வி.பி.

சோமவன்ச அமரசிங்க கட்சியில் இருந்து விலகியமை பாரிய நட்டமாகும். எனவே அவருடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள தாம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

சோமவன்ச அமரசிங்க, முன்னாள் ஜனாதிபதி ஜனவரி 9ஆம் திகதியன்று பதவியை தக்கவைத்துக்கொள்ள எடுத்த முயற்சி மற்றும் நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்ற ஜே.வி.பியின் இயலாமை போன்ற விடயங்கள் தொடர்பில் பிரச்சினைகளை எழுப்பியிருந்தார்,

எனினும் வேறுபல காரணங்களின் நிமித்தம் அந்த விடயங்களில் கவனம் செலுத்தமுடியாமல் போனது என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை சோமவன்ச அமரசிங்க கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலேயே விலகிச்சென்றுள்ளார் என்றும் அநுரகுமார சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வெற்றிக்கு வேண்டும் நல்ல நண்பர்கள்

'உங்கள் நண்பர்களை பற்றிச் சொல்லுங்கள், உங்களைப்பற்றிச் சொல்கிறேன்' என்று ஒரு அறிஞர் சொன்னதை நாம் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும். நண்பர்கள் நமது வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். வாழ்க்கையில் வெற்றி பெற நினைக்கிறார்கள். நினைக்கிறார்கள் தங்கள் நண்பர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

உடல் வளர்வதற்காகத்தான் வாய் உண்கிறது. வாய் உண்பதற்காக கை உதவுகிறது. கண்கள் உறங்க வேண்டும் என்பதற்காகவே காது இசையைக் கேட்கிறது. கால்கள் சரியாக நடக்க வேண்டியே கண்கள் பார்க்கின்றன. இடுப்பில் உள்ள ஆடை நழுவும் போது கை உதவுகிறது. உடலில் காயம் பட்டால் கண் அழுகிறது. இப்படித்தான் நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பர்.

நல்ல ஆலோசனைகளை சொல்ல, கவலைகளைப் பகிர்ந்துகொள்ள, தொழில்களில் பங்குதாரர்களாக, நலிவு ஏற்படும் போது தாங்கிப் பிடிக்க, விருதுகள் மூலம் மனச்சோர்வைப் போக்க, தகவல்களைப் பரிமாறிக் கொள்ள, ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்க- இப்படி இன்னும் எத்தனையோ முறைகளில் நண்பர்கள் உறுதுணையாக உங்களுக்கு இருப்பர்.

உறவினர்கள் நம்மிடம் எப்போதும், எதையாவது எதிர்பார்த்துக் கொண்டே இருப்பர். நண்பர்கள்தான் நமக்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பர்.

நல்ல நண்பர்களாகத் தேர்வு செய்ய வேண்டும். நல்ல நண்பரைத் தேர்ந்தெடுக்கும் வரை நிதானம் வேண்டும். தேர்ந்தெடுத்த பின் உறுதியாக இருக்க வேண்டும். தேவையில்லாத சந்தேகங்களுக்கு இடம் தரக் கூடாது. நல்ல நண்பர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் வெற்றியிலும் தோல்வியிலும் உங்களுடன் இருப்பர். உங்கள் நிலை மோசமாகும் போது நழுவி விடுவர். நல்ல நண்பர்கள் கண்ணாடி போன்றவர்கள். முக அழகையும் காட்டுவர். அதேபோல் அழுகையும் காட்டுவர். பாராட்டும்போது பாராட்டுவர், கண்டிக்கும்போது கண்டிப்பர். கெட்ட நண்பர்கள் நம்மைப் புகழ்ந்துகொண்டே தங்கள் காரியத்தை சாதித்துக்கொள்வர்.

'உன்னைவிட உயர்வான மனிதரைத் தவிர மற்றவர்களோடு தொடர்பு கொள்ள வேண்டாம்' என்பார் சிந்தனையாளர் கன்பூஷியஸ். நல்ல நண்பன் வெயில் காலத்தில் விசிறியகவும் குளிர்காலத்தில் குளிர்காய நெருப்பாகவும் இருப்பான். மனைவியைவிட நண்பனிடமே சில விடயங்களை மனம் விட்டுப் பேச முடியும். நல்ல நண்பர்கள் இருந்தால் உங்களால் பதற்றமின்றி பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியும்.

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உறவு கொள்ளும் கலையைப்பற்றி நீங்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். உம்மணாம் மூஞ்சியாய் இருக்கக்கூடாது. யாரும் பழக வருவார்கள் என்று காத்திருப்பதைவிட நாமே மற்றவர்களுடன் பழகுவதற்குத் தொடங்க வேண்டும்.

ஒருமுறை லியோ டால்ஸ்டாய் ஒரு பூங்காவிற்கு சென்றார். அங்கு தனக்கு எதிரில் வந்தவரை பார்த்து 'ஹலோ எப்படி இருக்கிறீர்கள்' என்று நலம் விசாரித்தார். வந்தவர் சிடுமூஞ்சி. 'நாம் இதுவரை சந்தித்ததே இல்லை. அப்படி இருக்கும்போது என்ன ஹலோ வேண்டிக் கிடக்கிறது' என்று கூறி விட்டுப் போய்விட்டார். மறுநாளும் டால்ஸ்டாய் அந்தப் பூங்காவிற்கு சென்று மீண்டும் அவரை நலம் விசாரித்து, 'நேற்று நாம் இருவரும் சந்தித்துக் கொண்டோம். என்னை உங்களுக்குத் தெரியாது என்று சொல்லி விடாதீர்கள்' என்று சொல்ல அந்த நண்பர் சிரித்து விட்டார். இருவரும் அதற்குப் பிறகு நண்பர்களாகினர்.

**கொடுத்ததை மறப்பதும் பெற்றதை நினைப்பதும் நல்ல நட்புக்கு அடையாளம் என்கிறார் திருவள்ளுவர். புதிய ஆடை உடலுக்கு அழகு. ஆனால் பழைய நண்பனே வாழ்க்கைக்கு அழகு. நாம் வளமாக இருக்கும்போது நண்பர்களுக்கு நம்மைத் தெரியும். நாம் வறுமையில் இருக்கும்போது நமக்கு நண்பர்களைத் தெரியும். நல்ல நட்புக்கு எல்லா சுமைகளும் இலகுவானவை. இவற்றை மனதில் வைத்துக்கொண்டு வெற்றிகளைப் படைப்போம்.**

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதவுகளைத் திறக்கும் அமெரிக்கா!

பயணிகள் விமானங்களின் வருகை, புறப்படுகையால் எப்போதும் பரபரப்பாக இருக்கும், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கடந்த மாதம் 19 ஆம் திகதி, இராணுவ விமானம் ஒன்று வந்திறங்கியது.

அது 26 பேர் பயணம் செய்யக் கூடிய அமெரிக்க கடற்படையின் சி-2 ரக போக்குவரத்து விமானம்.

அமெரிக்க கடற்படையினரின் பயன்பாட்டுக்காக மட்டுமே தயாரிக்கப்பட்ட அந்த விமானத்தில், இரண்டு விமானிகள், இரண்டு விமானப் பணியாளர்கள், மற்றும் சில அமெரிக்க கடற்படை அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

ஆனால் அவர்கள், அதிலிருந்து இறங்கி விமான நிலையத்துக்குள் நுழையவில்லை. கட்டுநாயக்க விமான நிலையத்துடன் இணைந்ததாக உள்ள, விமானப்படைத் தளத்தின் ஓடு பாதையில் நிறுத்தப்பட்டிருந்த அந்த விமானம், குறுகிய நேர ஓய்வுக்குப் பின்னர், இலங்கையின் தென்கிழக்குத் திசையில் விரிந்து கிடக்கும் இந்தியப் பெருங்கடல் நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது.

அந்த விமானத்தில், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா மற்றும் நான்கு இலங்கைக் கடற்படை அதிகாரிகள் பயணத்தை மேற்கொண்டனர்.

இலங்கைத் தீவின் கரையில் இருந்து சுமார் 225 கடல் மைல் தொலைவில் இந்தியப் பெருங்கடலுக்குள் இருந்த, குறுகிய மிதக்கும் ஓடுதளம் ஒன்றில் அந்த விமானம் தரையிறங்கியது.

அங்கு கால் வைத்ததுமே, அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினர் ஆச்சரியத்தில் உறைந்து போயிருந்தனர். அதற்குக் காரணம், அந்த விமானம் தாங்கிக் கப்பலின் பிரமாண்டம் தான்.

333 மீற்றர் நீளத்தையும், 6062 மாலுமிகள் மற்றும் பணியாளர்களையும் கொண்டதே, அமெரிக்க கடற்படையின், யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன் என்ற அந்த விமானம் தாங்கிக் கப்பல்.

அதனை ஒரு மிதக்கும் தீவு என்றே கூறலாம். சுமார் 90 போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் நிறுத்தப்பட்டிருந்த அந்த விமானம்தாங்கி கப்பல், அணு சக்தியில் இயங்கும் திறன் கொண்டது.

பாகிஸ்தானில் கொல்லப்பட்டு அமெரிக்க கொமாண்டோக்களால் எடுத்துச் செல்லப்பட்ட அல்கைதா தலைவர் பின்லேடனின் உடல் இந்தக் கப்பலில் இருந்தே, கடலினுள் மூழ்கடிக்கப்பட்டது. பாரசீக வளைகுடாவில் நிறுத்தப்பட்டிருந்த யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன், தனது பயணத்தை முடித்துக் கொண்டு ஹவாய் தீவு நோக்கிப் பயணத்தை மேற்கொண்டிருந்த நிலையில்தான், அங்கு அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழு பயணம் செய்திருந்தது.

அமெரிக்க கடற்படையின் விமானம் தாங்கி கப்பல்களுக்கு மாலுமிகளை ஏற்றிச் செல்வது, பொருட்களையும் அஞ்சல்களையும் கொண்டு செல்வதற்கென்றே வடிவமைக்கப்பட்ட சி-2 விமானத்தை, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி, அவர்களை தமது கப்பலுக்கு அழைத்துச் சென்றிருந்தது அமெரிக்க கடற்படை.

அங்கு, அவர்களுக்கு விமானந்தாங்கி கப்பலை சுற்றிப் பார்க்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அதன் செயற்பாடுகள் குறித்து அமெரிக்க அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டன.

அதுமட்டுமன்றி, விமானந்தாங்கி கப்பலில் தரித்து நின்ற, போர் விமானங்களும், நீர்மூழ்கி எதிர்ப்பு ஹெலிகொப்டர்களும், ஒத்திகையில் ஈடுபட்டு, தமது திறனை வெளிப்படுத்தின. அதனைப் பார்வையிட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இது ஒரு அசாதாரணமான வாய்ப்பு என்றும், இதற்கு முன்னர் இதுபோனற காட்சிகளை திரைப்படங்களில் தான் பார்த்ததாகவும், அதை நேரில் காணும் போது நெகிழ்ச்சியடைந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இதனை, இலங்கை அரசாங்கம் கூறவில்லை. யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன் கப்பல் வெளியிட்ட செய்திக்குறிப்பில்தான் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க - இலங்கைக் குழுவினருக்கு இடையில் நடந்த பேச்சுக்களை அடுத்து, இலங்கைக் குழுவினரை, மீண்டும் கட்டுநாயக்காவில் கொண்டு வந்து தரையிறக்கியது சி-2 விமானம். மீண்டும், அது யு.எஸ்.எஸ். கார்ல் வின்சனுக்குத் திரும்பிய போது, அந்தக் கப்பல் கிழக்கு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது.

அமெரிக்க விமானம் தாங்கிப் போர்க்கப்பலுக்கு வெளிவிவகார அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன கடற்படைத் தளபதி ஆகியோர் மேற்கொண்ட பயணம் [illegible] சில நாட்களுக்குப் பின்னர்தான் வெளியே தெரியவந்தது.

யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன் சார்பில் ஏப்ரல் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்தப் பயணம் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்ட பின்னரே, இலங்கைக் கடற்படையின் ஊடகப் பிரிவு அதுபற்றிய தகவல்கள் மற்றும் ஒளிப்படங்களை வெளியிட்டது.

கடற்படை வெளியிட்ட அந்தச் செய்தியை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டதோடு சரி, வெளிவிவகார அமைச்சோ, பாதுகாப்பு அமைச்சோ இதுகுறித்து தனியாக எந்த அறிவிப்பையும் விளக்கத்தையும் அளிக்கவில்லை. யு.எஸ்.எஸ். கார்ல் வின்சனுக்கு, வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட பயணம், சாதாரணமானதொன்று அல்ல.

ஆனால், இது இருதரப்பு உறவுகளை பலப்படுத்தும், அமெரிக்க விமானம்தாங்கிக் கப்பல்களின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் ஒரு நடவடிக்கை என்று அமெரிக்கத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இது இலங்கைத் தரப்புக்கு ஒரு புதிய அனுபவம் என்றே கூறலாம்.

இதுபோன்ற சந்தர்ப்பம், இலங்கையின் எந்தவொரு கடற்படைத் தளபதிக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ இதற்கு முன்னர் கிட்டியிருக்கவில்லை.

இலங்கைக் குழுவினர் யு.எஸ்.எஸ். கார்ல் வின்சனுக்கு பயணம் மேற்கொள்வதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி, இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் ரிச்சரிட் வர்மா மற்றும் இந்தியக் கடற்படை அதிகாரிகளின் குழுவொன்றும் அங்கு பயணம் மேற்கொண்டிருந்தது.

ஆனாலும், இலங்கைக் குழு வினர் யு.எஸ்.எஸ். கார்ல் வின்சனுக்கு மேற்கொண்ட பயணத்துக்கு அமெரிக்கத் தரப்பில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதை, யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை, தெளிவாக காட்டியிருக்கிறது.

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சூழலில், இலங்கையுடனான உறவுகளுக்கு அமெரிக்கா புதிய கதவுகளைத் திறக்கிறது என்பதற்கான ஒரு அடையாளமாக இதனைக் கருதலாம்.

அதுவும், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு, இரண்டு வாரங்கள் முன்னதாகவே யு.எஸ்.எஸ். கார்ல் வின்சனுக்கான இலங்கைக் குழுவின் பயணம் இடம் பெற்றிருக்கிறது.

இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கும் அமெரிகா, பாதுகாப்பு மற்றும் ஏனைய துறைகளிலும் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி இருந்த காலகட்டத்தில், அமெரிக்க - இலங்கை உறவுகள் குறுகிக் கொண்டே வந்தன.

இப்போது அந்த நிலையை மாற்றுவதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் கூட, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளில், பெரிய இடைவெளி ஏற்பட்டிருக்கவில்லை. ஆனாலும், அவை வெறும் மனிதாபிமான உதவித் திட்டங்களை அடிப்படையாக கொண்டதாகவே இருந்தது.

(தொடரும்)

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்துக் குண்டுகளை வீசி சவுதி கூட்டுப்படை தாக்குதல்

(ஏடன்)

**ஏமனில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான விமானத் தாக்குதல்களில் சவுதி தலைமையிலான கூட்டுப்படையினர் பரவலாக தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை (cluster bomb) பயன்படுத்துவதாக ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.**



வடக்கு ஏமனில் கவுதி கிளர்ச்சிக்குழுவினர் வலுவாக நிலைகொண்டுள்ள சாடா மாகாணத்திலுள்ள கிராமங்களுக்கு அருகே கொத்துக்குண்டுகள் போடப்பட்டமைக்கு நம்பகமான ஆதாரங்கள் இருப்பதாக அந்த அமைப்பு கூறுகின்றது.

இந்த குண்டுகள் அமெரிக்காவால் சவுதி அரேபியாவுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்"க்கும் விநியோகிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் படங்கள் மற்றும் காணொலி ஆதாரங்கள் இருப்பதாக ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் தெரிவித்துள்ளது.

ஆனால், ஏமனில் கொத்துக் குண்டு பயன்படுத்தப்படுவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை சவுதி முன்னர் மறுத்திருந்தது.

கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்படுவது பலநாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் சவுதியும் அமெரிக்காவும் அதனை தடைசெய்ய வில்லை.

இதனிடையே, சவுதி தலைமையிலான கூட்டுப்படையினர் ஏமனின் ஏடன் துறைமுக நகரில் பெரும் தரைவழி படை நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக வெளியான தகவல்களை சவுதி அரேபியாவின் இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார்.

ஆனால், சிறியளவிலான படையணி ஒன்று நகரில் முதற் தடவையாக தரையிறங்கியுள்ளதாக அங்கிருந்துவரும் பல்வேறு தகவல்களும் கூறுகின்றன.

கவுதி ஆதரவு மற்றும் எதிர்ப்பு தரப்புகளிடமிருந்து வந்துள்ள இந்தத் தகவல்களை பிபிசியால் இதுவரை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

வேவு பார்க்கும் அணியொன்றே அங்கு சென்றுள்ளதாக சில தகவல்கள் கூறுகின்றன.

அதேநேரம், அந்தப் படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே விமான நிலையத்துக்கு அருகே மோதல்கள் வெடித்துள்ளது. (இ-5)

## நேபாள விமான நிலையத்தில் பெரிய விமானங்கள் இறங்கத் தடைவிதிப்பு

(காத்மண்டு)

பூகம்பத்தில் பாதிப்பு ஏற்பட்டதால் நேபாள விமான நிலையத்தில் பெரிய விமானங்கள் இறங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி கடும் பூகம்பம் ஏற்பட்டது. அதில் வீடுகள், கட்டடங்கள் மற்றும் புராதன சின்னங்கள் இடிந்து தரைமட்டமாகின. அதில் ஆயிரக்கணக்கானவர்கள் பலியானார்கள்.

இடிபாடுகளில் இருந்து தொடர்ந்து சடலங்கள் மீட்கப்படுகின்றன. இதனால் சாவு எண்ணிக்கை 7 ஆயிரத்து 200 ஆக உயர்ந்துள்ளது. மீட்புப் பணியில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், இஸ்ரேல் உள்ளிட்ட 20 நாடுகளை சேர்ந்த குழுவினர் ஈடுபட்டுள்ளனர். உயிர் பிழைத்தவர்கள் தற்காலிக முகாம்கள் மற்றும் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நிவாரண உதவி பொருட்களை வெளிநாடுகள் அனுப்பி வருகின்றன. அவை விமானங்கள் மூலம் வருகின்றன. ஆனால் அவை தரை இறங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், பூகம்பத்தில் விமான நிலையங்கள் கடும் சேதம் அடைந்துள்ளன. காத்மண்டு புறநகரில் திரிபுவன் சர்வதேச விமான நிலையம் உள்ளது. அங்கு ஓடும் தளம் சேதம் அடைந்துள்ளது.

எனவே, அங்கு தற்போது நடுத்தர ரக விமானங்கள் மட்டுமே இறங்கும் வகையில் சீரமைக்கப்பட்டுள்ளது. பெரிய இராணுவ விமானங்கள் மற்றும் சரக்கு விமானங்கள் வந்து இறங்க முடியாத சூழ்நிலை உள்ளது. அதைத் தொடர்ந்து அங்கு பெரிய ரக விமானங்கள் இறங்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் வெளிநாடுகளில் இருந்து நிவாரணப் பொருட்களை ஏற்றி வரும் விமானங்களுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. (இ-5)




## தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பெண்களின் கண்ணீர்ப் பேட்டி

(மைடுகுரி)

போகோஹராம் தீவிரவாதிகள், எங்களை இயற்கைக்கடனைக் கழிக்கக்கூட தனியாக செல்ல விடவில்லை என்று பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களுக்கு நேர்ந்த அவலத்தை கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவில் ஒரு குறிப்பிட்ட அரசை உருவாக்க வலியுறுத்தி போகோஹராம் தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக சிறுமிகளையும், பெண்களையும் அவர்கள் கடத்துவதோடு இராணுவம் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் நைஜீரிய இராணுவத்துடன் அயல் நாடுகளான நைஜர், கமரூன் நாடுகளின் இராணுவமும் ஈடுபட்டு வருகிறது. இதற்கிடையே நைஜீரியாவில் உள்ள சாம்பிசா வனப்பகுதியில் நைஜீரிய இராணுவம் தீவிரவாதிகளுடன் சண்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு அடைத்து வைக்கப்பட்டு இருந்த 200 சிறுமிகள் மற்றும் 93 பெண்களை மீட்டனர்.

மீட்கப்பட்ட பெண்கள் தற்போது நகர்ப்பகுதிக்கு கொண்டுவரப்பட்டு உள்ளனர். பெண்கள், தீவிரவாதிகள் தங்களுக்கு கொடுத்த துன்பங்களை விபரித்துள்ளனர். பெண்களை கடத்தியபோது எதிர்ப்பு தெரிவித்த ஆண்களை தீவிரவாதிகள் கொடூரமாக கொலை செய்தனர். பலர் கற்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

தினமும், கொலைகளை பார்க்க வேண்டிய அவலநிலையே இருந்தது. நாம் எப்போது கொல்லப்படுவோம் என்ற பயத்திலே இருந்தோம். தீவிரவாதிகள் எங்களை ஒரு இஞ்ச் கூட நகரவிடவில்லை, அவர்களது பார்வையில் இருந்து தனியாக எங்கேயும் செல்ல விடவில்லை. இயற்கைக்கடனைக் கழிக்கக்கூட செல்ல விடவில்லை.

காய்ந்த மக்கா சோளம் மட்டுமே மதிய உணவாக கொடுக்கப்படும். அதுவும் மனிதர்கள் சாப்பிட முடியாதது என்று பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவில் தற்போது மீட்கப்பட்டவர்கள் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சிபோக் பாடசாலையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட சிறுமிகள் இல்லை என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

நைஜீரியாவின் சிபோக் நகரில் உள்ள ஒரு பாடசாலையில் தேர்வு எழுதிக்கொண்டு இருந்த 200 இற்கும் மேற்பட்ட மாணவிகளை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

இந்த கடத்தல் சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. அவர்களை மீட்கும் நடவடிக்கையில் நைஜீரிய இராணுவத்துடன் பல்வேறு நாடுகளின் படை வீரர்களும் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் மாணவிகள் கடத்தப்பட்டு ஓராண்டு ஆன நிலையில் இதுவரை அவர்களை மீட்கும் முயற்சியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

தொடர்ந்து இராணுவம் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது. (இ-5)

**மத்திய தரைக் கடலில் 24 மணிநேரத்தில்**

## 3500 குடியேறிகள் மீட்கப்பட்டுள்ளனர்

மத்திய தரைக்கடலில் கடந்த 24 மணிநேரத்தில் மூவாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட குடியேறிகளை மீட்புக் குழுவினர் மீட்டுள்ளதாக இத்தாலிய கடலோரக் காவல்படை தெரிவித்துள்ளது.

சிஸிலி தீவுக்கு தெற்காக மீட்புப் பணிகள் தொடர்ந்தும் நடந்துவருவதாக கடலோரக் காவல்படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மரக்கலங்களிலும் மிதவைகளிலும் வந்த குடியேறிகளை இத்தாலிய மற்றும் பிரான்ஸ் நாடுகளின் 13 கப்பல்கள் கொண்ட மீட்பு அணியினர் காப்பாற்றியுள்ளனர்.

மீட்கப்பட்டவர்கள் இத்தாலியத் துறைமுகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

சாதகமான வானிலையையும் கொந்தளிப்பு இல்லாத கடலையும் மனிதக் கடத்தல்காரர்கள் பயன்படுத்திக்கொண்டு, ஆபிரிக்காவிலிருந்து கடலைக் கடக்க முயன்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குடியேறிகளின் படகுகள் கடந்த மாதம் கடலில் மூழ்கியதில் 800 இற்கும் அதிகமானவர்கள் பலியானதைத் தொடர்ந்து தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்கான நிதியை அதிகரிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் இணங்கியமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பரிதாபச் சம்பவம்

பாகிஸ்தானில் மின்வயர் அறுந்து பேருந்து மீது விழுந்ததில் அதில் பயணம் செய்த 8 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் உள்ள கைர்பூர் நாதன் ஷா நகரம் அருகே, 30 பயணிகளோடு பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது.

அப்போது, எதிர்பாராத விதமாக அந்தப் பேருந்து மீது உயர் மின்னழுத்த மின்சார வயர் அறுந்து விழுந்தது. இதில் பேருந்து தீப்பிடித்தது. இந்த தீவிபத்தில் பேருந்தில் பயணம் செய்த 8 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும், காயமடைந்த 20 பேர் அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பலியானோரில் 6 பேர் பெண்கள் ஆவர். பேருந்தில் பயணம் செய்தவர்கள் திருமணம் ஒன்றில் பங்கேற்பதற்காக [illegible] தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதிரம் 28லட்சம் பெறுமதியானதல்ல

## ரோஹித விளக்கம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் காணாமற் போய் மறுபடியும் கிடைத்த மோதிரம் 28 லட்சம் ரூபாய் பெறுமதியானதல்லவென பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கமே குறித்த மோதிரத்திற்கு இவ்வளவு பெறுமதியை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த நாட்களில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் மோதிரத்தின் பெறுமதி தொடர்பாக பல்வேறான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள்.

குறித்த மோதிரம் காணாமற் போயிருந்த சந்தர்ப்பத்தில் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இம்மோதிரம் அவரது சொத்து தொடர்பான விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-5)




# பேரணிக்குச் செல்வதா நீதிமன்றுக்கு செல்வதா

## குழப்பத்தில் கம்மன்பில

குருநாகலில் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள மகிந்தவுக்கு ஆதரவான பேரணியில் பிவித்துரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில கலந்து கொள்வது சந்தேகம் என கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாய் நாடு ஆபத்தில் மகிந்தவுடன் நாட்டை வெற்றிக்கொள்வோம் என்ற தலைப்பில் எதிர்வரும் 8ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தில் மக்கள் பேரணியொன்று இடம்பெறவுள்ளது.

குருநாகலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் 4 பங்காளி கட்சிகளும் இணைந்து நடத்தவுள்ள இந்த பேரணியில் 50றக்கும் அதிகமான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என உதயகம்மன்பில தெரிவித்திருந்தார்.

எனினும் கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது மாற்றம் செய்யப்பட்ட தேசிய கொடியை ஏந்தியிருந்த குற்றச்சாட்டின் பேரில் உதய கம்மன்பில உள்ளிட்ட 9 பேரை எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனால் அவர் குறித்த பேரணியில் கலந்து கொள்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

# கைத்துப்பாக்கி விவகாரம்

# நாமல் ராஜபக்ஷவிடம் விரைவில் விசாரணை!

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரி பங்கேற்ற கூட்டத்தில் இராணுவ கோப்ரல் ஒருவர் ஆயுதமொன்றுடன் பங்கேற்றமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது என தெரிய வருகிறது.**

அம்பாந்தோட்டை ஹங்கொனுகொலபெலஸ்ஸவில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அருகில் கைத்துப்பாக்கி ஒன்றுடன் இராணுவ கோப்ரல் கூட்டத்திற்கு சென்றிருந்த வேளை, குறித்த இராணுவ கோப்ரலை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

குறித்த இராணுவ கோப்ரலை 12ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த இராணுவ கோப்ரல் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்கள் காரணமாக விசாரணை நடத்தப்பட வுள்ளது.

இராணுவக் கோப்ரல் தண்ணீர் போத்தல் ஒன்றையே வைத்திருந்தார் எனவும், கைத்துப்பாக்கி எதனையும் எடுத்துச் செல்லவில்லை எனவும் நாமல் தெரிவித்துள்ளார்.

கைத்துப்பாக்கியுடன் சந்தேகத்திற்கு இடமான முறையில் கூட்டத்தில் சஞ்சரித்த இராணுவ கோப்ரலை ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் விசாரணை செய்யாது விடுவித்திருந்தனர்.

இவ்வாறு எவ்வித விசாரணையும் செய்யாது விடுவிக்கப்பட்டமையின் பின்னணியில் நாமல் ராஜபக்ஷவிற்கு தொடர்பு உண்டா என்பது குறித்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்ய உள்ளனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ கோப்ரல், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவல ர்களில் ஒருவர் என்பது குறிப்பி டத்தக்கது.

# நாட்டின் தலைவிதியை மாற்றிய 19வது அரசியல் திருத்தச்சட்டம்

## அமீர் அலி தெரிவிப்பு

(கொழும்பு)

இளைஞர்களை வலுவூட்டுகின்ற ஒரு திருத்தமாக, இந்த நாட்டின் தலைவிதியை மாற்றிமைக்கின்ற ஒரு திருத்தமாக எங்களது பங்களிப்புடன் 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவும் அண்மைக் காலமாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனது பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடிய வகையில் கருத்து வெளியிடுகின்றார் எனவும் சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் எம். எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

கனவு காண்பதற்கு அல்ல வழியைக் காட்டுவதற்கு? எனும் இளைஞர் அபிவிருத்தி அமைப்பின் வேலைத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் கல்குடா தொகுதிக்கான நிகழ்வு வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அண்மையில் பத்திரிகைச் செய்தி ஒன்றில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆலோசனை சொல்கின்ற விடயத்தினையும், அதற்குப் பின்னால் என்னைப் பற்றி குறை கூறுவதையும் கண்டேன். ஏன் அவர் எனக்கு எதிராக சேறு பூசுகின்றார் என தெரியவில்லை.

பிழையாக துவேச ரீதியாக கருத்துக்களை வெளியிட்டு சமூகங்களை பிளவுபடுத்த வேண்டாம் என்று தமிழ் அரசியல் தலைவர்களிடம் நான் வினயமாக கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

அரசியல் என்பது எல்லோராலும் செய்யக்கூடிய விடயமல்ல, அந்தந்த பிரதேசத்தில், யார் யார் எல்லாம் மக்களின் மனதை வென்று இருக்கின்றார்களோ அவர்கள் அங்கு நிச்சயம் அந்த மக்களால் மதிக்கப்படுவார்கள்.

நாங்கள் மக்களின் மனங்களை வெல்ல வேண்டுமே தவிர அதனை விட்டு விட்டு துவேச ரீதியாக பேசி பிரதேச ரீதியில் பிளவுகளைக் கிளப்பி மீண்டும் ஒரு சிக்கலான நிலவரத்தை தோற்றுவித்து மட்டக்களப்பு மாவட்டத்திலே பிரச்சினைகளை ஏற்படுத்தி விடக்கூடாது.

சிறுபான்மை சமூகத்தின் மாற்றத்தில்தான் நாட்டில் நல்லாட்சிக்கான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று நாங்கள் தேசியத்திற்கு சொல்லி வைத்திருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி இரத்தினம் கதிரவேலு

கரவெட்டி கிழக்கு கேவளையை பிறப்பிடமாகவும் கரவெட்டி மத்தி கவுந்திலை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் கதிரவேலு கடந்த 2ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமைமு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி இராமலிங்கம் நாகம்மா

ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் மந்திகை சிலையடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் நாகம்மா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று திங்கட்கிழமை பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று பின்னர் பூதவுடல் ஆனைவிழுந்தான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



### தர்மலிங்கம் விஜயகுமார்

அரியாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் இத்தாலி Palermo அரியாலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் விஜயகுமார் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்



### ராமன் நடேசர்

(முன்னாள் சுகாதாரக் கல்வி அதிகாரி)

இந்தியா காரைக்காலை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ராமன் நடேசர் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமா னார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 8மணிதொடக்கம் மு.ப11 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹலோ ட்ரஸ்ட் பணியாளர்களின்

# பிரச்சினைகள் குறித்து உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**கண்ணிவெடி அகற்றும் நூற்றுக் கணக்கான பணியாளர்கள் பணியில் இருந்து நிறுத்துவது அவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். கண்ணிவெடி அகற்றும் அர்ப்பணிப்புமிக்க பணியே மாவட்டத்தில் விரைவான மீள்குடியேற்றத்திற்கு வழி வகுத்தது என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்ததுள்ளார்.**

நேற்றைய தினம் தொடர்ந்தும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்த ஹலோ ட்ரஸ்ட் பணியாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

திடீரென நூற்றுக்கணக்கான பணியாளர்கள் பணியிலிருந்து நிறுத்துவது அவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த தொழில் வருமானத்தை நம்பி வாழ்க்கையை கொண்டு சென்ற பணியாளர்கள் குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.

இதேவேளை ஒரே தடவையில் 350 இற்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நிலையில் இந்த மாவட்டம் இல்லை. எனவேதான் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களை பணியிலிருந்து திடீரென நிறுத்தும் போது அவர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்வர்.

எனவேதான் இந்த நெருக்கடியான விடயம் தொடர்பில் விரைவாக ஜனாதிபதி, பிரதமர், மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி உரிய நடவடிககைக்கு முயற்சி செய்வேன்,

அது மாத்திரமன்றி நாளை புதன்கிழமை மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார். அச்சந்தர்ப்பத்தில் அவரை தொழில் திணைக்கள அதிகாரிகள் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் சார்பில் பிரதிநிதிகள், ஹலோ ட்ரஸ்ட் நிறுவன அதிகாரிகள் ஆகியோருடனான சந்திப்புக்கும் ஏற்பாடு செய்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் நிலைமைகளை அவர்கள் நேரில் கண்டு தீர்வுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் எனத் தெரிவித்தார். (2)

# கிளிநொச்சி கல்வி வலயத்தில் பதவி நிலை வெற்றிடங்கள்

(முல்லாவி)

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நிலவுகின்ற ஆங்கில பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி நிலை வெற்றிடத்திற்கும் 1ஏபிதரப்பாடசாலைகள் 9, 1சி தரப்பாடசாலைகள் 13 ஆகியவற்றுக்கான அதிபர்கள் பதவி நிலை வெற்றிடங்கள் என்பவற்றிற்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடமை நிறைவேற்றும் பாடரீதியான ஆங்கிலப் பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி நிலைக்கான விண்ணப்பங்களும் 1ஏபி தரப் பாடசாலைகளான கிளி/வட்டக்கச்சி ம.வி, கிளி/இந்துக் கல்லூரி, கிளி/அக்கராயன் ம.வி, கிளி/கிளிநொச்சி ம.வி., கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி, கிளி/பூநகரி மத்திய கல்லூரி, கிளி/பாரதி வித்தியாலயம், கிளி/ முருகானந்தா கல்லூரி, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி ஆகியவற்றுக்கான அதிபர்கள் வெற்றிடங்களும்

1சி பாடசாலைகளான கிளி/ இராமநாதபுரம் ம.வி, கிளி/ திருவையாறு ம.வி, கிளி/உருத்திரபுரம் ம.வி, கிளி/கனகபுரம் ம.வி, கிளி/வன்னேரிக்குளம் ம.வி, கிளி/ கோணாவில் அ.த.க.பாடசாலை, கிளி/ பரந்தன் ம.வி., கிளி/கண்டாவளை ம.வி, கிளி/பிரமந்தனாறு ம.வி, கிளி/பூநகரி நல்லூர் ம.வி, கிளி/வேரவில் இந்து .ம.வி, கிளி/கறுக்காய்த்தீவு ம.வி, கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கான அதிபர்கள் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதில் ஆங்கிலப் பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி நிலை வெற்றிடத்திற்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். அதிபர்களுக்கான பதவிநிலை வெற்றிடங்களுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர் வரும் 20ஆம்திகதி புதன்கிழமை ஆகும்.

மேற்படி பதவி நிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சேவை தொடர்பான நிபந்தனைகளையும் மற்றும் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் விண்ணப்பதாரிகள் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் மேற்படி திகதிகளுக்கு முன்னர் செயலாளர், கல்வி அமைச்சு, வடக்குமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)



ஊற்றங்கரை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது. இத் தேர்த்திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடை சூழ தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிப்பதை படத்தில் காணலாம்.

(படம்:-முள்ளியவளை செய்தியாளர்)




# இலங்கை விவசாயக் கல்லூரியில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை

## வடக்கு மாகாண அமைச்சர் ஐங்கரநேசனிடம் மகஜர் கையளிப்பு

வவுனியா மாவட்டத்தில் உள்ள இலங்கை விவசாய கல்லூரி மாணவர்கள் தமக்கு நிரந்தர தமிழ் மொழி மூல விரிவுரையாளர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தர வேண்டும் எனக்கோரி கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சரின் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்த விவசாயக் கல்லூரி மாணவர்கள்,வருகை தரு விரிவுரையாளர்கள், மாணவர்களின் பெற்றோர் என 60இற்கு மேற்பட்டோர் ஒன்றிணைந்து இம் மகஜரை கையளித்திருந்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட விவசாய அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் முதுகெலும்பு விவசாயம் ஆகும். அந்த வகையில் விவசாயக் கற்கைகளுடன் தொடர்புடைய அபிவிருத்தி அவசியமாகும். விவசாய சேவை உத்தியோகத்தர் (SLAGS) வடக்கு மாகாணத்திற்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்ற பணி நிலை ஆகும்.

கடந்த சில வருடங்களாக விவசாய சேவை உத்தியோகத்தர் பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகத் தேர்வில் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

இந்த முறைப்பாடு பல தடவை எமக்கு கிடைத்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் ஊடாக மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு இதை கொண்டு சென்றிருந்தோம். இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனாலும் இதை தீவிரப்படுத்தி, தொடர்ந்தும் இது தொடர்பாக அவர்களுக்கு அறிவிக்கவுள்ளோம்.

வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழிமூலம் தனியாக ஒரு பரீட்சை நடத்தி இந்தப் பதவி வெற்றிடத்தை நிரப்புமாறு கோரிக்கை விடுத்து மத்திய அரசை வலியுறுத்தவுள்ளோம்.

அத்துடன் விவசாய கல்லூரிக்கு உடனடியாக தமிழ் மொழிமூலமான விரிவுரையாளர்களை நியமிக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தவுள்ளோம்.

அதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவுள்ளோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்கள் வழங்கிய மகஜரில் உள்ள விடயங்கள் வருமாறு,

வவுனியாவில் அமைந்துள்ள இலங்கை விவசாயக் கல்லூரியில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் விரிவுரைகள் சீராக இடம்பெறாமையை முன்னிட்டு பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்வதுடன் இந்நிலைமை தொடர்வதால் பூரணத்துவமான களப்பயிற்சியை நிறைவு செய்யாத டிப்ளோமாதிரிகளாகவே வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமையினை இட்டு அச்சம் அடைகின்றோம்.

இலங்கையின் விவசாயத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்ற போதும் தமிழ்மொழி மூலத்தில் விவசாயக் கல்லூரியில் விவசாயக்கல்வியைத் தொடரும் நாம் வெகுவாக புறக்கணிக்கப்படுவதாகவே உணர்கின்றோம்.

இங்கு முதலாம் இரண்டாம் வருட மாணவர்களுக்கான இருபது வரையான பாடநெறிகளுக்கான விரிவுரைகளை நிகழ்த்த நிரந்தர நியமனம் பெற்ற இலங்கை விவசாய சேவையின் மூன்று விரிவுரையாளர்களே காணப்படுகின்றனர்.

விரிவுரையாளர் கோரும் போது ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதனால் வெவ்வேறு நிரந்தர நியமனங்களுடன் அவர்கள் வெளியேறி வருவது தொடர்கதையாக இடம் பெற்று வருகின்றது.

இதன்போது குறித்த ஒப்பந்தம் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட விரிவுரையாளர்களால் தொடரப்பட்ட பாடநெறிகள் வேறு விரிவுரையாளர்களிடம் பாரப்படுத்தப்படுவதனால் பின்வரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றோம்.

மேற்கூறப்பட்ட ஒப்பந்த அடிப்படையில் வருகை தந்து வெளியேறிய விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட செய்முறைகளை தெளிவாக நிறைவுசெய்ய முடியாமை, விரிவுரையாளர் மாற்றத்தினால் ஏற்படும் உளத்தாக்கத்திற்கு உள்ளாகுதல், குறித்த காலப்பகுதியில் பாடநெறியை பூர்த்தி செய்ய முடியாமை, போதியளவான களப்பயிற்சியை பெற முடியாதுள்ளமை, தொடர் மதிப்பீட்டு பரீட்சைகள் உரியமுறையில் பூர்த்தி செய்ய முடியாமை.

இவ்வாறாக எம்மால் அறியப்படும் வகையில் கடந்த வருடத்தில் அதற்கு முன் ஒப்பந்த அடிப்படையில் வருகைதந்த இரு விரிவுரையாளர்கள் இடைநடுவே நிரந்தர நியமனம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு வருகை நிலை விரிவுரையாளர்களாலும் சில விரிவுரைகள் இடம்பெற்று வருவதுடன் பூரண களப்பயிற்சியை பெற முடியாதுள்ளதுடன் சீரான,முறையான விரிவுரைகளை எதிர்பார்க்க முடியாதுள்ளது.

அத்துடன் வருகை நிலை விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்படும் விரிவுரைகள் கிழமை நாட்களில் இடம்பெறாது சனி,ஞாயிறு தினங்க ளிலும் விடுமுறை நாட்களில் இடம் பெறுவதால் விடுமுறைகள் இன்றி கற்றலை தொடர வேண்டியுள்ளது.

அத்தோடு தொடர்ந்தும் இவ்வாறான விரிவுரையாளர்கள் பற்றாக்குறையான நிலைமை காணப்படுமாயின் இக்கல்லூரியிலிருந்து வெளியேறும் டிப்ளோமாதாரிகள் எதிர்காலத்தில் பாரிய பின்னடைவுகளை சந்திக்க வேண்டி ஏற்படும்.

தொடர்ந்தும் ஒப்பந்த அடிப் படையில் விரிவுரையாளர்களை இணைக்கும் திட்டத்தை கைவிட்டு நிரந்தர தமிழ் மொழிமூல விரிவுரையாளர்களை நியமிக்க ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.(2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை முறையிலான இனப்பெருக்கத்தை பயன்படுத்தி மீன் வளர்ப்புத் திட்டம் அறிமுகம்

(மன்னார்)

**வடக்கு மாகாணத்தில் உள்ள மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான கடற்கரைப்பகுதிகளில் (களப்பு,கடல் நீரேரி பகுதிகளில்) செயற்கை முறை இனப்பெருக்கத்தை பயன்படுத்தி மீன்வளர்ப்பு தொழில்நுட்பம் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருவதாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு ஆகிய மாவட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரி எஸ்.சலீபன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டமானது இயற்கையான மிகவும் கூடிய சந்தைவாய்ப்புள்ள அத்துடன் செயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்யக்கூடிய மீன் இனங்கள் சிலவற்றை செயற்கை முறை ஊடாக இனப்பெருக்கம் செய்வதன் மூலம் புதிய குஞ்சுகளை உருவாக்கி அவற்றை வளர்ப்புசெய்து சந்தைப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

வடக்கு மாகாணத்தில் கடந்த 2013ஆம் ஆண்டு வியட்நாம் நாட்டின் நிதியுதவியுடன் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

அத்துடன் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் அதிகாரிகள் சிலர் வியட்நாம் நாட்டில் இத் தொழில்நுட்ப பயிற்சியை பெற்றுள்ள நிலையில் அவர்கள் இங்குள்ள பயனாளிகளிடத்தில் இத்திட்டத்தை அறிமுகம் செய்து பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

இந்த மீன்வளர்ப்பு தொழில் நுட்பம் மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் கொடுவாய் மீன், பாலை மீன், கடல் அட்டை போன்ற மீனினங்கள் இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன.

வடமேல் மாகாணத்தில் சிலாபம், புத்தளம் ஆகிய பிரதேசங்களில் உள்ள குஞ்சு பொரிக்கும் நிலையங்களில் இருந்து செயற்கையாக இனப்பெருக்கம் செய்யப்பட்ட மீன் குஞ்சுகள் எடுத்துவரப்பட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள களப்பு, கடல் நீரேரிபகுதிகளில் வளர்ப்பு செய்யப்படுகின்றன.

இத்திட்டம் மிகவும் வெற்றிகரமான முறையில் நடைபெற்று வருவதோடு சந்தை வாய்ப்பை அதிகரிக்கின்ற தொழிலாகவும் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)




## சாமஸ்ரீ தேசமான்ய விருது



(வவுனியா)

வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் டாக்டர் வி.பி.சுந்தரராஜன் என்பவருக்கு சாமஸ்ரீ தேசமான்ய விருது வழங்கப்பட்டது.

இவர் வேலணை மத்திய கல்லூரி,ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆகிய பாடசாலையின் பழைய மாணவராவார். சர்வதேச திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பட்டம் பெற்றவரும் சமாதான நீதிமானுமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# அத்தியாவசிய பிரச்சினைகளை இனங்கண்டு சீர்செய்து தருவேன்

## வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் உறுதிமொழி

மன்னார் பிரதேச வெண்மையாக்கல் உரிமையாளர் சங்கத்தினர் எதிர்கொள்ளும் அத்தியாவசிய பிரச்சினைகளை முதலில் இனங்கண்டு அதனை முடிந்தளவுக்கு உடன் சீர்செய்து தருவதாக வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

மன்னார் பிரதேச வெண்மையாக்கல் உரிமையாளர் சங்கத்தினரை வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், நேற்று முன்தினம் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்தார்.

குறித்த சந்திப்பின் போது அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அவர்களது அத்தியாவசிய பிரச்சினைகளை முதலில் இனம் கண்டு அதனை முடிந்த அளவுக்கு உடன் சீர் செய்து தருவதாகவும் சங்கத்தின் ஒற்றுமையை கட்டி எழுப்பி அபிவிருத்திகளை மேற்கொள்ளவுள்ளதாகவும்அமைச்சர் உறுதி வழங்கினார்.

அதனை தொடர்ந்து நடைபெற்று முடிந்த தொழிலாளர் தினத்தையொட்டி சங்க உறுப்பினர்களுக்கு சாரம் மற்றும் சேலை என்பவற்றை அமைச்சர் வழங்கி வைத்தார். (2)

# வலயமட்ட பெருவிளையாட்டு போட்டிகளின் முடிபுகள்

(30.04.2015 வெளியானதன் தொடர்ச்சி)

19வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான எறிபந்து

மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலை,மு/துணுக்காய் அ.த.க.பாடசாலை,மு/ஒட்டுசுட்டான் ம.வி.

19வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான துடுப்பாட்டம்

மு/ஒட்டுசுட்டான் ம.வி.,மு/பாலிநகர்ம.வி.,மு/மல்லாவி மத்தியகல்லூரி

19வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான எல்லே

மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/பாலிநகர் ம.வி.,மு/ஒட்டுசுட்டான் ம.வி.

15வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டம்

மு/கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை,மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை,மு/யோகபுரம் மகா வித்தியாலயம்

17வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டம்

மு/ஒட்டுசுட்டான் ம.வி.,மு/யோகபுரம் ம.வி.,மு/கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை

19வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டம்

மு/ஒட்டுசுட்டான் ம.வி.,மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை,மு/யோகபுரம் ம.வி.

19வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கூடைப்பந்து

மு/மல்லாவி மத்திய கல்லூரி.

(தொடரும்) (2-15)

# மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் மின்சாரம் இதுவரை கிடைக்கவில்லை

## கைவேலி சிஎஸ்ரி பண்ணைவீதி மக்கள் ஆதங்கம்

புதுக்குடியிருப்பு கைவேலி சிஎஸ்ரி பண்ணை வீதியில் வசித்து வருகின்றவர்களின் வீடுகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதியின் முன்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்துள்ள போதிலும் பின் பகுதியிலுள்ள 50இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான மின்சார இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்பகுதி இரவு வேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படுவதுடன் மாணவர்கள் தமது கல்வியை குப்பி விளக்குகளில் தொடர்வதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மின்சாரத்தைப் பயன்படுத்தி செய்யப்படுகின்ற வேலைகள் எதுவும் மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது. எனவே வீடுகளுக்கான மின்சார இணைப்பை வழங்குவதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு உதவ வேண்டுமென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-27)



பளை இயக்கச்சி பகுதியைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான 4 1/2 இலட்சம் ரூபா பெறுமதியான சுய தொழில் ஊக்குவிப்பு பொருட்களினை கனடா நாட்டு புலம் பெயர் உறவுகள் வழங்கியிருந்தனர்.இதனை வடக்கு மாகாண சபை உறுப்பியர் திருமதி அனந்தி சசிதரன் அண்மையில் வழங்கி வைத்துள்ளார்.

(படம்: [illegible])

# முழங்காவிலில் செய்கை பண்ணப்பட்ட பப்பாசி செய்கை வெற்றியளித்துள்ளது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பழப்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் ஐ.எல்.ஓ. திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு தலா 170 கன்றுகள் வீதம் வழங்கப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம் முழங்காவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பப்பாசி செய்கை தமக்கு அதிக வருமானம் கிடைக்கும் வகையில் அமைந்துள்ளதாக பப்பாசி செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டில் நிலவிய கடுமையான வரட்சி காரணமாக குறிப்பிட்ட சில விவசாயிகளின் செய்கைகள் பாதிக்கப்பட்ட போதும் எஞ்சிய செய்கைகள் வெற்றியளித்துள்ளது.

வாரம் ஒன்றுக்கு 4ஆயிரம் கிலோ முதல் 6ஆயிரம் கிலோ வரையான பப்பாசி பழம் அறுவடை செய்யப்படுகின்றது என விவசாயிகள் கூறினர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு உண்டோ யார் அறிவார்?

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மகிந்த -மைத்திரி சந்திப்பு முக்கிய சங்கதிகள் ஏதும் உண்டா?

குருசேத்திரப் போர் ஆரம்பமாகப் போகிறது. துவாரகையில் குடியிருக்கும் கிருஷ்ண பரமாத்மாவிடம் உதவி கேட்டு துரியோதனனும் அருச்சுனனும் செல்கின்றனர்.

கிருஷ்ண பரமாத்மா உறங்குகின்ற வேளையில் சென்ற துரியோதனன் கிருஷ்ணனின் தலைமாட்டில் அமர்ந்து கொண்டான். துரியோதனனுக்குப் பின்னதாகச் சென்ற அருச்சுனன் கிருஷ்ணனின் கால்மாட்டில் உட்கார்ந்தான்.

இப்போது கண்ணன் துயில் கலைகிறான். கால்மாட்டில் இருக்கும் அருச்சுனனைக் கண்டமட்டில் அருச்சுனா! என்று ஆரத்தழுவ, தலைமாட்டில் இருந்த துரியோதனனை கிருஷ்ணனுக்குக் சுட்டிக் காட்டுகிறான் அருச்சுனன்.

இருவரிலும் முதலில் வந்தது துரியோதனனாயினும் முதலில் கண்டது அருச்சுனனே என்பதால், தனது ஆயுதங்கள் துரியோதனனுக்கும் தான் அருச்சுனனுக்குமானது என்று தீர்மானிக்கப்படுகிறது. எல்லாம் கிருஷ்ணனின் இராஜதந்திரம்.

பாண்டவர்கள் வெல்ல வேண்டும் என்பதற்காக முதலில் வந்தவர் என்பதை விட, முதலில் கண்டவருக்கே நான் உரியவன் என்று தீர்ப்பு வழங்கப்பட்டு விடுகிறது.

பாரதப்போரில் நடந்த சூழ்ச்சிகள் இந்த உலகின் பல இடங்களில் நடந்துள்ளது; நடந்து வருகிறது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இந்த வகையில் ஜனாதிபதித் தேர்தலின்போது மிகப்பெரும் எதிரிகளாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் விரைவில் சந்திக்கவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்கின்ற வேளையில், மகிந்தவும் மைத்திரியும் ஒருவரை ஒருவர் சந்திக்கின்ற சூழமைவு ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் மகிந்த ராஜபக்ஷ மைத்திரிக்குக் கைகொடுக்க முனைந்த போது கை கொடுக்க மறுத்த மைத்திரி சம்பிரதாயத்துக்கு ஒரு குடும்பிடு போட்டார்.

மகிந்தவின் கைகள் கறை பிடித்தவை. எனவே அந்தக் கைகளை எனது கைகளால் தொடவிரும்பவில்லை என்பது கைகொடுக்க மறுத்தமைக்கான காரணமாக மைத்திரியால் கூறப்பட்டது.

நல்லது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவோடு ஒன்றாக இருந்த போதிலும் அவரின் ஆட்சிமுறைமையால் வெறுப்படைந்து அவரை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மைத்திரி, தேர்தலில் தான் வெல்வேனா இல்லையா என்பதன் முடிவு தெரியாமலே மகிந்தவுக்கு கைகொடுக்க மறுத்தமை ஒரு துணிச்சலான-நேர்மையான செயல் என்றே சொல்ல வேண்டும்.

நிலைமை இப்படியாக இருக்கையில் இப்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கு மைத்திரி சம்மதம் தெரிவித்துள்ளமை பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

அதாவது எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை போட்டியிடாமல் தடுப்பதற்காக இச் சந்திப்பு நடக்கிறதா?

இப்போது நாங்கள் ஒரே இனம் என்ற அடிப்படையில் சர்வதேச விசாரணையை தடுத்தாக வேண்டும் என்ற கொள்கைப்படி சந்திப்பு நடக்கிறதா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

எதுவாயினும் மகிந்தவை எதிர்த்து மைத்திரிக்கு வாக்களித்து மைத்திரியை ஜனாதிபதியாக்கிய தமிழ் மக்களுக்கு பாதகம் செய்யும் வகையில் மைத்திரி-மகிந்த சந்திப்பு அமையாது என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

அதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் விட்டால், ஊழல் குற்றச்சாட்டுக்களில் இருந்து மகிந்த குடும்பத்தை காப்பாற்ற முடியும் என்ற செய்தி சொல்லப்படுமா? அல்லது என்னையும் எனது குடும்பத்தையும் காப்பாற்றுங்கள் என்று மைத்திரியிடம் மகிந்த கேட்பாரா? என்பதும் சந்திப்புக்குப் பின்னரே தெரிய வரக்கூடிய சங்கதிகளாகும்.

# திரிபுபடுத்தப்பட்டுள்ள கொடிகள் விற்பனை

## 85 ஆயிரம் கொடிகள் மீட்பு

உரிய தர நிர்ணயங்களுக்கு உட்படாத திரிபுபடுத்தப்பட்ட பௌத்த கொடிகள் நாடளாவிய ரீதியில் விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் வரை சுமார் 85 ஆயிரம் கொடிகள் நுகர்வோர் அதிகார சபையின் சுற்றிவளைப்புக்களில் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெசாக் பண்டிகை முன்னிட்டு இந்த பௌத்த கொடிகள் விற்பனை செய்யப்பட இருந்த நிலையிலேயே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நீலம், மஞ்சள், சிவப்பு, வெள்ளை மற்றும் செம்மஞ்சள் ஆகிய ஆகிய நிறங்களை உள்ளடக்கிய தரமான பௌத்த கொடிகளுக்கு பதிலாக வேறு நிறங்களை உள்ளடக்கியும் வாசகங்களைப் பொறித்தும், தர்மச் சக்கரம் உள்ளிட்ட சின்னங்களைப் பதித்தும் இவ்வாறான திரிபுபடுத்தப்பட்ட பௌத்த கொடிகள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறானவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற பௌத்த கொடி வைத்திருந்த வர்த்தக நிலைய உரிமையாளரகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் உண்மை பௌத்த கொடி தொடர்பில் பலருக்கு போதிய அறிவு இல்லை எனவும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. தம்மிடம் வரும் நுகர்வோர் தர்மச்சக்கரம் பதித்த பௌத்த கொடிகளையே கேட்பதாகவும் அல்லது வேறு வாசகங்களைச் சொல்லி அது பதிக்கப்பட்ட கொடிகளை வேண்டுவதாகவும் வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந் நிலையில் உரிய தரத்தினைக் கொண்ட பௌத்த கொடி தொடர்பில் பொது மக்களை அறிவுறுத்தும் திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்த பௌத்த அமைப்புக்கள் முன் வர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## கொலைக் குற்றம் சாட்டப்பட்ட நிலையில்

# 4 வருடங்களின் பின்னர் நாடு திரும்பியவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டுக்கு சென்று நான்கு வருடங்களுக்கு பின்னர் நாடு திரும்பிய ஒருவரை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வு பிரிவினர் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்ட அவரை, தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் நான்கு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கட்டுகஸ்தோட்டை ஹமன்கொடை எனுமிடத்தில் 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது இந்திக்க சதுரங்க என்பவர் உயிரிழந்தார். இந்த கொலை சம்பவத்தின் சந்தேக நபர்களில் ஒருவரான இவர், வெளிநாட்டுக்கு தப்பிச்சென்றுள்ளார். இவர் இல்லாமல் வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போதும் இவரை கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவியும் கோரப்பட்டிருந்தது. இந் நிலையில், வெளிநாட்டிலிருந்து கட ந்த சனிக் கிழமை, இலங்கைக்கு திரு ம்பிய சந்தேக நபர், கட்டுநாயக்க வமான நிலையத்திலிருந்து வெளியேற முயற்சித்த போது அவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, குற்றப்புலனாய்வு பிரிவினரால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை, கண்டி நீதவான் நீதிமன்றத்தில் இன்று 5ஆம் திகதி ஆஜர் செய்ய உள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

## வெசாக் தினத்தில் மதுபானம் விற்ற முதியவர் கைது

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள பழைய போத்தல் விற்பனை நிலையத்தில் மதுபானம் விற்பனை செய்த 60 வயதுடைய வயோதிபரை நேற்று திங்கட்கிழமை கைது செய்ததாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வயோதிபரிடமிருந்து 180 மில்லி லீற்றர் கொள்ளவுடைய 310 மதுபானப் போத்தல்களை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் வயோதிபரை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கைதடி கண்டி வீதி திருவருள் மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான மன்மத வருட மஹோற்சவம் 2015 எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

இதேவேளை எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

## சங்கடஹர சதுர்த்தி

யாழ். வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சங்கடஹரசதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டப பூசை என்பன நிகழ்ந்து விநாயகர் வீதி வலம் வருவார். (இ)

# மருத்துவ கட்டணப் பட்டியல் விநியோகிக்கப்பட வேண்டும்

## தனியார் வைத்தியசாலைகளுக்கு புதிய சட்டம்

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலைகளுக்கு வருகின்ற நோயாளிகளுக்கு, வழங்கும் மருந்துகள் மற்றும் பயன்படுத்தும் வைத்திய உபகரணங்களின் விலைகளை குறிப்பிட்டு கட்டணப்பட்டியல் விநி யோகிக்கப்படவேண்டும் என்று தனியார் வைத்திய நிர்வாகத்துக்கு நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

சில தனியார் வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு வழங்குகின்ற கட்டணப்பட்டியலில் மருந்து மற்றும் வைத்திய உபகரணங்களின் விலைகள் உண்மையான விலைகளை விடவும் கூடுதலான விலைகள் குறிப்பிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவற்றை கவனத்தில் கொண்டே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது என்று நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.ஏ.எச்.எம். டக்ளஸ் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் கட்டணப்பட்டியலில் நோயாளர்களுக்கு வழங்கும் சகல வசதிகளையும் குறிப்பிடப்பட்டிரு க்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அதிகார சபை, இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும என்றும் அறிவித்துள்ளது. (செ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



உங்கள் சொந்தக் கால்களில் நிமிர்ந்து நின்று, உங்களை மனிதன் என்று உணரும்போதுதான் நீங்கள் உபநிடதங்களையும் ஆன்மாவின் மகத்துவத்தையும் நன்றாக அறிந்துகொள்ளமுடியும்.

என்னை வாள்வெட்டாது, ஆயுதங்கள் துளைக்காது, நெருப்பு எரிக்காது, காற்று உலர்த்தாது, நான் எல்லாம் வல்லவன், நான் எல்லாம் அறிந்தவன், நம்மைக் காப்பாற்றக்கூடிய இந்த மங்கலமயமான வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்லுங்கள். நம்மைப் பலவீனர்களென்று சொல்லாதீர்கள். நாம் எதையும் செய்ய முடியும். நம்மால் எதைத்தான் சாதிக்க முடியாது. எல்லாமே நம்மால் முடியும்.

ஒருவேளை இராமர்கள் பலர் இருக்கலாம். ஆனால் இரண்டாவதாக ஒரு சீதை இருக்கமுடியாது என்றுதான் சொல்லவேண்டும். உண்மையான பெண்மை வார்க்கப்பட வேண்டிய அச்சு அவள்.

எந்தத் தொழில் செய்பவராயினும் எல்லோருக்கும் உபநிடதங்கள் பொதுவானவை. வேதாந்தத்தின் இந்தக் கருத்துக்கள் வெளிவந்தாக வேண்டும். காட்டில் மட்டும் இருந்தால் போதாது. அவை வெளிவந்து நீதி மன்றங்களிலும் வழிபாட்டு மேடைகளிலும் ஏழையின் குடிசையிலும் மீன்பிடிக்கும் மீனவரிடமும் படிக்கின்ற மாணவரிடமும் செயற்பட்டாக வேண்டும்.

ரிஷி என்றால் என்ன? தூயவர், முதலில் தூயவர் ஆகுங்கள். நீங்கள் ஆற்றலைப் பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தை வீழ்த்தி தொடரினை சமன் செய்தது மேற்கிந்தியதீவுகள்



இங்கிலாந்து அணிக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்தது.

மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணம் சென்ற இங்கிலாந்து அணி, மூன்று போட்டிகள கொண்ட டெஸ்ட தொடரில் விளையாடியது.

முதலிரண்டு டெஸ்டின்முடிவில், இங்கிலாந்து அணி 1-0 என முன்னிலை வகித்தது. இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி பார்படாசில் நடந்தது.

இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 257 ஓட்டங்கள் எடுத்தது. இதில் அணித்தலைவர் குக் (105) சதம் அடித்தார். மொயின் அலி (58) அரைசதம் அடித்தார்.

மேற்கிந்திய தீவுகள் 189 ஓட்டங்கள் எடுத்தது. இதில் பிளாக்வுட் (85) அரைசதம் எடுத்தார். பந்து வீச்சில் இங்கிலாந்து வீரர் அண்டர்சன் 6 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.


பின்னர் 68 ஓட்டங்கள் முன்னிலையில் 2வது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாநது அணி, 123 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் மேற்கிந்திய தீவுகளுக்கு வெற்றி இலக்காக 192 ஓட்டங்கள் கொடுக்கப்பட்டது.

எளிய இலக்கை நோக்கி 2வது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பிராத்வைட் (25), ஹோப் (9), சாமுவேல்ஸ் (20), சந்தர்பால் (0) ஏமாற்றினர்.

அபாரமாக ஆடிய டேரன் பிராவோ (82) அரைசதம் கடந்தார். இவருக்கு பிளாக்வுட் ஒத்துழைப்பு தந்தார்.

இதனால் இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுக்கு 194 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பிளாக்வுட் (47), அணித்தலைவர் ராம்தின் (0) அவுட்டாகாமல் இருந்தனர்.

இந்த வெற்றியின்மூலம் 3 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரை மேற்கிந்திய தீவுகள் அணி 1-1 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது. (க)





## குப்பிளான் விக்னேஸ்வரா சம்பியன்

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களின் ஆண்கள் எல்லே அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட எல்லே சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா கழகம் சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் 02 ஓட்டங்களை பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தார்கள். பதிலுக்கு விளையாடிய குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் 3 ஓட்டங்களை பெற்றுச் சம்பியனாகியது. (க)



## லுயிஸ் சுவாரஸ் 'ஹட்ரிக்' கோல் பார்சிலோனாஅணி அபாரவெற்றி




லா லிகா போட்டியில் லுயிஸ் சுவாரஸ் ஹட்ரிக் கோல் அடிக்க பார்சிலோனா 8-0 என கோர்டோபாவை வீழ்த்தியது.

லா லிகாவின் நேற்றைய லீக் போட்டியில் ஸ்பெயின் அணியின் முன்னணி கிளப் அணியான பார்சிலோனோ, கோர்டோபாவை எதிர் கொண்டது.

இரு அணி வீரர்களும் திறமையாக விளையாடியதால் 41 நிமிடங்கள் வரை கோல் விழவில்லை.

42 ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் ராகிடிக் முதல் கோலை அடித்தார். பின்னர் முதல் பாதி நேரம் முடியும் கடைசி நிமிடத்தில் லுயிஸ் சுவாரஸ் மற்றொரு கோல் அடித்தார்.

மெஸ்சி கூடுதல் நேரத்தில் ஒரு கோல் அடித்தார். இதனால் முதல் பாதி நேரத்தில் பார்சிலோனோ 3-0 என முன்னிலை பெற்றிருந்தது.

2ஆவது பாதி நேரம் ஆட்டம் தொடங்கிய 8வது (53) நிமிடத்தில் மேலும் கோல் அடித்த சுவாரஸ் 88வது நிமிடத்தில் மற்றொரு கோல் அடித்தார்.

80வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து தனது கோல் எண்ணிக்கையை 2ஆக உயர்த்தினார் மெஸ்சி. 65வது நிமிடத்தில் பிறகு ஒரு கோலும், 85வது நிமிடத்தில் நெய்மர் ஒரு கோலும் அடித்தனர்.

இதனால் பார்சிலோனா 8-0 என கோர்டோபாவை வீழ்த்தியது. (க)

## இறுதிப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன்

இளைஞர் சேவை மன்றத்தின் கோப் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் அணிக்கு 5 பேர் கொண்ட புட்சல் எனும் காற்பந்தாட்ச் சுற்றுப்போட்டியில் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் இளைஞர் விளையாட்டுக்கழகம் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

காரைநகர், தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர் கழகங்கள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சாவற்கட்டு மகாத்மா இளைஞர் அணியும் ஏழாலை ஞானமுருகன் இளைஞர் அணியும் மோதின.

முதல்பாதியாட்டத்தில் ஞானமுருகன் அணிக்கு எதிரணியின் வீரர் ஒருவரால் சேம் சைட் கோல் ஒன்று கிடைக்கப்பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் மகாத்மா அணி பதில் கோல் அடித்தது. எனினும் அதனை முறியடிக்கும் விதமாக ஞானமுருகன் அணி ஒரு கோலைப் பெற்றது.

ஞானமுருகன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதல் அணியாக இறுதிக்குள் நுழைந்தது. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நெஹ்ரா ரெய்னா அசத்தல்**

# சுப்பர் கிங்ஸிடம் வீழ்ந்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

பெங்களூர் அணிக்கு எதிரான நேற்றைய ஐபிஎல் போட்டியில் சென்னை அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐபிஎல் தொடரில் சென்னை சேப்பாக்கத்தில் நடந்த நேற்றைய லீக் ஆட்டத்தில் சென்னை- பெங்களூர் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற சென்னை அணித் தலைவர் தோனி, முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.


அதன்படி, தொடக்க வீரர்களாக ஸ்மித், மக்கலம் களமிறங்கினர்.

ஸ்மித் முதல் ஓவரின் முடிவில் ஸ்டார்க் பந்தில் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார்.

இவரைத் தொடர்ந்து மக்கலம் (20),டு பிளசிஸ்(24)வெளியேறினர்

நிதானமாக விளையாடிய ரெய்னா அரைசதம் அடித்தார். அவர் 46 பந்துகளில் 52 ஓட்டங்கள் (5 பவுண்டரிகள், ஒரு சிக்சர்) எடுத்து ஆட்டமிழந்தார்.

ஜடேஜா (3) நிலைக்கவில்லை. அணித்தலைவர் தோனி அதிரடியாக விளையாடி 18 பந்தில் 29 ஓட்டங்கள் (2 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தார். பிராவோ (2) ஏமாற்றினார்.




பாவன் நெகி (13), மோகித் சர்மா (0) அடுத்தடுத்து வெளியேற, சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்கள் எடுத்தது. நெஹ்ரா (0) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய பெங்களூர் அணிக்கு தொடக்க ஆட்டக்காரரர் மேடின்சன் (4) ஏமாற்றினார். டி வில்லியர்ஸ் (21) நிலைக்கவில்லை.

மன்தீப் சிங் (0) ரன்-அவுட் முறையில் வெளியேற்றப்பட்டார். நிதானமாக விளையாடி வந்த அணித் தலைவர் ஹோலி (48) அரைசதத்தை தவறவிட்டார்.

தினேஷ் கார்த்திக் (23) சற்று தாக்குப் பிடித்தார். அடித்து நொறுக்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சர்ப்ராஸ்கான் (8) ஏமாற்றம் அளித்தார்.

ஹர்சல் படேல் (0), ஸ்டார்க் (1), டேவிட் வீஸ் (17), இக்பால் அப்துல்லா (0) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, பெங்களூர் அணி 19.4






ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 124 ஓட்டங்களை எடுத்தது. சஹால் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் சென்னை அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத் தில் வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் நெஹ்ரா 3, ஈஸ்வர் பாண்டே, பிராவோ தலா 2, மோகித் சர்மா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்னை அணியின் ரெய்னா தெரிவானார். (க)

## சொந்த மண்ணில் ஐதராபாத்தை வென்றது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

ஐபிஎல் சீசன் 8ன் நேற்றைய ஆட்டத்தில் ஐதராபாத்தை வீழ்த்தி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் வெற்றி பெற்றது.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்ற ஐதராபாத் அணி கப்டன் வோர்னர் முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களை குவித்தது.பாண்டே அதிகபட்சமாக 33 ஓட்டங்கள் எடுத்தார்.

168 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன்





களமிறங்கிய சன் ரைசர்ஸ் ஐதராபாத் அணி தொடக்கம் முதலே சரிவை சந்தித்தது. முதல் ஓவரிலேயே தொடக்க வீரர் டேவிட் வோர்னர் அவுட்டானார். அடுத்து வந்த ஓஜாவும் வந்த வேகத்திலேயே வெளியேற ஷிகர் தவான், ஹென்ரிக்ஸ் இருவரும் நிலைத்து ஆட முயன்றனர்.

5ஆவது ஓவரில் தவான் அவுட்டாக அடுத்தடுத்து வந்தவர்கள் அனைவரும், விக்கெட்களை பறிகொடுத்த சோகத்துடன் அரங்கு திரும்பினர். அடுத்து வந்த கரண் ஷர்மா அடுத்தடுத்து 3 சிக்சர்கள் விளாசி ஐதராபாத் ரசிகர்களை உற்சாகப்ப டுத்தினார். ஆனால் அடுத்து சந்தித்த 2-வது பந்திலேயே அவுட்டானார். அடுத்து வந்த புவனேஷ் குமார் அதிரடியாக விளையாடினாலும் குறைவான பந்துகளே இருந்ததால் 20 ஓவர் முடிவில் 132 ஓட்டங்கள் மட்டுமே ஐதராபாத் அணி எடுத்தது. இதனால் 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் உமேஷ் யாதவ் தெரிவானார். (க)






## சிவில் பாதுகாப்பு கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட செயலகத்தில் இன்று காலை 11 மணிக்கு யாழ் மாவட்ட செயலக அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் சிவில் பாதுகாப்பு கூட்டம் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் தற்போது தலைதூக்கியுள்ள வாள்வெட்டுச்சம்பவங்கள், குற்றச்செயல்கள் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், பொலிஸ் திணைக்களத்தினை சார்ந்தோர், பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் என்போர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்குற்ற...

இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரியின் இக்கருத்து தொடர்பில் டுவிட்டரில் தனது கருத்தைப் பதிவு செய்த போதே இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இவ்வாறு வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கத்திடம் ஜோன் கெரி கேட்டுக் கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது என்று எரிக் சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (செ-11)

## மகிந்த - மைத்திரி...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான டிலான் பெரேரா, லசந்த அழகியவன்ன மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து இது குறித்து தொடர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

முரண்பாடுகளை களைவதற்கு இந்த சந்திப்பு ஓர் வாய்ப்பாக அமையும் என உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதியை அழைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் போன்ற உயர் பதவி வகிப்பவர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறியமுடிகிறது.

இந்நிலையில் சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, பந்துல குணவர்தன, மஹிந்தானந்த அலுத்கமகே, ரி.பி.ஏக்கநாயக்க மற்றும் காமினி லொக்குகே ஆகியோர் நேற்று செவ்வாய்க்கிழமை கூடி, முன்னாள் ஜனாதிபதிக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் இடையிலான கூட்டம் தொடர்பிலான நிகழ்ச்சி நிரலை தயாரித்து வருவதாக கூறப்படுகிறது.

நாளை 6-ம் திகதி புதன்கிழமை மகிந்தவின் சகோதரனும் சபாநாயகருமான சமல் ராஜபக்ஷவின் இல்லத்தில் இச்சந்திப்பு நடத்த ஏற்பாடாகியுள்ளது.

எனினும் மேற்படி சந்திப்பு தொடர்பான விபரங்களை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பகிரங்கமாக அறிவிகக வில்லை.

இதேவேளை கடந்த மாதமும் முன்னாள் ஜனாதிபதிக்கும் தற்போதைய ஜனாதிபதிக்குமான சந்திப்பு உன்று ஏற்பாடாகியிருந்த நிலையில் மகிந்த தரப்பினரால் அச்சந்திப்பு நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தேர்தல் முறைமை மாற்றம்...

தொடர்பான யோசனை களை பெறுவதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த யோசனைகளின் பிரகாரம் தற்போது 225 ஆகவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 255 ஆக உயர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 165 நாடாளுமன்ற உறுப்பினர்கள், விகிதாசார முறைமையின்படி 90 நாடாளுமன்ற உறுப்பினர்களுமாக 255 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

விகிதா சார முறைப்படி தெரிவு செய்யப்படும் 90 நாடாளுமன்ற உறுப்பினர்களை பொறுத்தவரை 66 உறுப்பினர்கள் மாவட்ட ரீதியிலும், 24 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் ரீதியிலும் தெரிவு செய்யப்படும் வகையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தேச யோசனையை அடிப்படையாகக் கொண்டு சகல தரப்பினரிடம் இருந்தும் கருத்துக்களை பெற்றதன் பின்னர், புதிய தேர்தல் முறைமை மாற்றத்துக்கான அரசியலமைப்பு திருத்தத்தை சமர்ப்பிக்க கடந்த அமைச்சரவை கூட்டத்தின் போது முடிவு செய்யப்பட்டது.

அதேவேளை, தேர்தல் முறை குறித்த மற்றுமொரு யோசனையும் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த முறைப்படியும் 255 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வகையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது 196 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ரீதியிலும், 59 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் ரீதியிலும் தெரிவு செய்யப்படும் வகையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சிறுபான்மை மற்றும் சிறு அரசியல் கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேர்தல் முறை மாற்றத்தை முன்னெடுக்க வேண்டும் என்று பலதரப்பிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை அரசியலமைப்பின் 20-வது திருத்தச்சட்டமாக புதிய தேர்தல் முறைமை கொண்டு வரப்படவுள்ள நிலையில், இது தொடர்பில் சிறுபான்மைக் கட்சிகள் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகின்றன. (செ-11)

## மகிந்தவின் உயிருக்கு...

நாடு பிளவுபட்டுவிடாமல் யுத்தத்தை நிறைவு செய்து வலுவான அரசை அமைத்து ஆட்சி செய்த போதிலும் இதற்கு முன் எந்தவொரு ஜனாதிபதியும் சந்திக்காத வகையில் முன்னாள் ஜனாதிபதியும், அவரது குடும்பத்தினரும் அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளாகி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் இதற்கு முன்னர் ஒருபோதும் இதுமாதிரியான அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்குப் பதில் கூறும் வகையில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகையில், மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் சகல உரிமைகளையும் பறித்து கொண்டு அவரை கட்சியிலிருந்தும் மகிந்த ஒதுக்கியிருந்தார்.

ஆனால் எமது அரசு முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சலுகைகளையும், பாதுகாப்பையும் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## வடக்கில் சிங்கள குடியேற்...

னார் கட்டுக்கரை குளத்திற்கு விடாமல் அனுராதபுரத்தில் அணை கட்டுவதும் என இரு திட்டங்கள் அதில் உள்ளடங்கியிருக்கின்றன.

முன்னதாக மகாவலி கங்கை வடக்கிற்கு வராமலேயே மகாவலி எல் வலயத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்பகுதியிலும், வவுனியா மாவட்டத்தின் எல்லைப்பகுதியிலும் சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.

இதனாலேயே வெலிஓயா என்ற தனியான சிங்கள பிரதேச செயலர், பிரிவு அந்தப் பகுதியில் உருவாக்கப்பட்டது.

இதன் பின்னர் மீண்டும் மகாவலி கங்கையை கொண்டு வந்தால் அந்தப் பகுதியில் தமிழர்களின் அடிப்படை வாழ்வாதார தொழிலான விவசாயத்திற்கு அடிப்படையான நிலங்கள் முழுமையாக கபளீகரம் செய்யப்படும்.

மேலும் மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு 3 போகத்திற்குமான நீர், வழங்குவதாக கூறி கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள விவசாயிகளிடம் அனுமதி பெற்றிருக்கின்றார்கள்.

ஆனால் அவ்வாறு மல்வத்து ஓயா நீர் அனுராதபுரத்தில் மறிக்கப்பட்டால் கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு ஒரு போகத்திற்கும் கூட நீர் கிடைக்காது என்பதுடன், வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கர் தமிழர்களுடைய நிலம், அபகரிக்கப்படும் அபாயமும் உள்ளது.

இந்நிலையில் நீரை பயன்படுத்தி வடக்கில் சிங்கள குடியேற்றங்களை நிறுவவும், தமிழர்களின வாழ்வாதாரத்தை அழிக்கவும் முயற்சிக்கப்படுகின்றது.

ஆனால் இந்த நிகழ்ச்சி நிரல் தொடர்பாக வடக்கு மாகாண சபைக்கு எவ்விதமான அறிவித்தல்களும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் நாம் முதலமைச்சர் ஊடாக, ஜனாதிபதிக்கு எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தியிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## தந்தையும் தனயனும்...

ஆழ்ந்திருந்தது.

குறித்த குடும்பத்தில் தாய் தந்தை மகன் உட்பட மூவரும் வாழ்ந்து வந்த நிலையிலேயே இப்பரிதாபகர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தந்தையான ரஜீவன் தனது மகனான நிருஜனை அருகில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு தலை முடிவெட்டுவதற்காக துவிச்சக்கர வண்டியல் கூட்டி சென்று தலைமுடி வெட்டிய பினனர் வீடு திரும்பி கொண்டிருந்துள்ளனர். இதன் போது குறித்த இடத்தில் வீதியின் குறுக்காக வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தமையால்,

துவிச்சக்கர வண்டியில் இருந்து கீழ் இறங்கி மகனை கீழே இறக்கிவிட்டு வீதியின் கரையோரமாக நடந்து வருமாறு கூறிவிட்டு தந்தை வீதியின் நடுவாக துவிச்சக்கர வணடியை உருட்டிக்கொண்டு வந்துள்ளார்.

இதன் போது காற்று பலமாக வீசியமையினால் அருகில் இருந்த மரங்களின் இலைகள் மின்சாரக் கம்பிகள் மீது உரசிய வண்ணம் இருந்துள்ளன.

இதனால் மின்சாரக்கம்பி திடீரென தீப்பிடித்து அறுந்து வீழ்ந்துள்ளது. வீழ்ந்த மின்சாரக்கம்பி குறித்த வெள்ளத்திற்குள் வீழ்ந்தமையால் தந்தை மின்சாரத்தினால் தாக்கப்பட்டு துடிதுடிக்க. அதனை நேரில் கண்ணுற்ற ஒன்பது வயது மகன் மின்சாரத்தால் தாக்கப்படும் தந்தையை காப்பாற்றுவதற்காக வெள்ளத்தில் இறங்கியுள்ளான். இதனால் தந்தையும் மகனும் மினசாரத்தால் தாக்கப்பட்டு சம்பவ இடததிலேயே உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில் இருவரும் மினசாரத்தால் தாக்கப்பட்டதனை நேரில் கண்ணுற்ற அப்பகுதியை சேர்ந்த மற்றுமொருவர் இருவரையும் காப்பாற்றுவதற்காக வெள்ளத்தில் இறங்க முற்பட்ட வேளை அவரும் மின்சாரத்தினால் தாக்கப்பட்டுள்ளார்.

எனினும் அவர் மின்சார தாக்குதலல் இருந்து ஒருவாறாக அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியிருந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்த தந்தை மற்றும் மகனுடைய உடலங்கள் பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## அடுத்தடுத்து...

துள்ளார்.

மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போன்று இடம் பெற்ற இந்தவிபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஆனைக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் குறித்த குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் பூபதி வெதுப்பகத்திற்கு அருகாமையில் வந்த போது வீதியால் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றினை முந்திச் செல்ல முற்பட்டார். அதேவேளை எதிர்த் திசையில் துவச்சக்கர வண்டி வந்துகொண்டிருந்ததை குறித்த குடும்பஸ்தர் அவதானிக்கத்தவறியுள்ளார்.

இதனால் துவிச்சக்கரவண்டியுடன் மோதுண்டு தூக்கிவீசப்பட்ட நிலையில் தலைப்பகுதி வீதியோரமாகயிருந்த மணல் திட்டுக்குள் புதையுண்ட நிலையிலும் கால் பகுதி வீதியின் அருகேயும் கிடந்துள்ளது.

இதையறியாத நிலையில் அப்பகுதியால் பயணித்துக்கொண்டிருந்த கார் ஒன்று குறித்த குடும்பஸ்தரின் கால் மீது ஏறியுள்ளது. இதனால் பிரஸ்தாப குடும்பஸ்தரின் இடது கால் முறிந்து இரத்தம் பெருக்கெடுத்துள்ளது.

விபத்தில் பிரஸ்தாப குடும்பஸ்தர் சிக்கி சுமார் 45 நிமிடங்களுக்கு மேலாக உயிருக்குப் போராடிய நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசா ரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இதேவேளை துவிச்சக்கரவண்டியில் பயணித்த நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த மாசிலாமணி மதிராஜ் (வயது-23) என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைககாக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-6)

யாழ். நகரில் பிரபல்யமான
கைபடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
May பதினாறாம் திகதி காலை 9.00 மணி முதல் 16,17,18,19 ஆகிய நான்கு தினங்களில்
- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள் .
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:
- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்
Special Trainer Ganesh Sir
பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-
வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
(C-903)
BTEC # 21, Sirimbiyadi Land, (off Stanley Road), Jaffna. 077 6131358

வேலைவாய்ப்பு
புதியதோர் எதிர்காலத்தை நோக்கி
வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தினருக்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.
15 பேருக்கு மட்டும்
குறிப்பு :- தங்குமிடம் & உணவு இலவசம், வயதெல்லை 18- 40
இன்றே உடன் அழைக்க :-
0777981471, 0771363797
(C-904)

வேலைவாய்ப்பு
Golden Group Advertising Companies 2015 ற்கான ஐந்து வகையான பதவி வெற்றிடங்கள்
- Sales Distributer
- Supervisor
- Exaguite
- A.S Manager
- Administration (Female)

ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு :- கல்வித்தகைமை O/L, A/L விரும்பத்தக்கது.
தங்குமிடம் இலவசம். வயது எல்லை :- 18 - 35 (282)
தொடர்பு : 0779987699

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.